சொர்க்கத்தில்



வ. ரா.

சம்பாஷணை

'மணிக்கொடி' காலத்துக்கு மூல புருஷன் வ. ரா. என்பது தமிழகம் தெரிந்த விஷயம். பாரதியைத் தமிழகத்துக்கு எடுத்துக் காட்டினதும் வ. ரா. தான் என்பதும் தெரியாததல்ல. அதோடு வ. ரா. என்கிற போதே நடைச்சித்திரம் என்ற பெயரும் கூடவே நினைவுக்கு வரும். படைப்புத்துறையில் புதுப்புது இலக்கிய உருவங்களை தானே படைத்துக் காட்டியவர் வ. ரா. சொர்க்கத்தில் சம்பாஷணை, ஒரு புதுசு பூலோகவாழ்க்கையில் ஏகதேசம் ஒரு துறை வாழ்வு அல்லது ஒரு துறை ஈடுபாடு கொண்டிருந்தவர்களை சொர்க்கத்தில் சந்திக்கவைத்து தங்களை அன்று முன்னோக்கி இருந்த பிரச்னைகளுக்கு தாங்கள் ஈடுகொடுத்ததை அவைகளுக்குப்பின் இருந்த தங்கள் உணர்வோட்டத்தை மனநிலையை, பார்வையை அதாவது தங்கள் அந்தரங்கங்களாக இருந்தவைகளை தங்களுக்குள் வெளியிட்டுப்பேசி விவாதிக்க வைக்கிறார். வெகுசுவாரஸ்யமாக இருப்பதுடன், கலாரீதியான நல்ல சாதனையும் கூட இந்த சம்பாஷணைகள்.

விலை ரூ. 3-00

சொர்க்கத்தில் சம்பாஷணை

வ. ரா. வின்
மற்ற நூல்கள்

1. மழையும் புயலும்
2. மகாகவி பாரதியார்
3. சுந்தரி
4. விஜயம்
5. கோதைத் தீவு
6. சின்னச்சாம்பு
7. நடைச்சித்திரம்
8. புண்ணியமும் பலவீனமும்
9. வாழ்க்கை விநோதங்கள்
10. கற்றது குற்றமா ?
11. கலையும் வளர்ச்சியும்
12. தமிழ்ப் பெரியார்கள்
13. நமது இந்தியா
14. பர்டோலிக் கதை
15. ஜவஹர் சுயசரிதம்
16. மாய மேயோ
17. ஆண்டு நிறைவு
18. ஜப்பான் வருவானா ?

வ. ரா.

சொர்க்கத்தில் சம்பாஷணை

★

எழுத்து பிரசுரம்
சென்னை-5

எழுத்து பிரசுரம்—11
முதல் பதிப்பு: ஜூன், 1964

Published by:
Ezhutthu Prachuram
19-A, Pilliarkoil street
Triplicane, Madras-5

விலை ரூ. 3-00

அச்சிட்டது:
ஜீவா அச்சகம், சென்னை-14

பொருளடக்கம்

முகவுரை

'வ. ரா. மனிதனுடன் பழகுவதில்லை, கொள்கைகளுடன்தான் பழகுகிறார்' என்று ஒரு சந்தர்ப்பத்தில் ஸ்ரீ ந பிச்சமூர்த்தி குறிப்பிட்டிருக்கிறார். இந்த கருத்து ரொம்ப சரியானது. வ.ரா வின் எழுத்துக்கள் இதைத்தான் நிரூபிக்கும்—அது கட்டுரை ஆனாலும் சரி, கதை, நாடகம், நாவல், சம்பாஷணை எதானாலும் சரி. ஸ்ரீ டி. எஸ் சொக்கலிங்கம் குறிப்பிட்டிருப்பதுபோல் 'தமிழ் நாட்டில் ஆழ்ந்த கருத்துக்களோடு எழுதுகிற முதல்தரமான எழுத்தாளரான' வ. ரா. தன் காலத் 'தமிழனுக்கு சிந்திக்கும் சுபாவமே இல்லை' என்று குறைப்பட்ட வ. ரா. தமிழ் மொழியில், 'ஆங்கிலத்தில் உள்ளவைகளைப்போல் எழுதமுடியும்' என்று முதலில் காட்டிய வ. ரா. படைப்புத் துறையில் புதுப்புது இலக்கிய உருவங்களை தானே படைத்துக் காட்டினது மட்டுமில்லை; மற்ற படைப்பாளிகளும் புதுப்புது உருவ சோதனைகள் செய்யவும் உந்துதல் தந்தவர்.

வ. ரா. என்கிறபோதே 'நடைச்சித்திரம்' என்ற பெயரும் கூடவே நினைவுக்கு வரும். அந்த சொல்லும் அவரது; அந்த உருவமும், விஷயமும், பாணியும் அவருடையதுதான். அவரைப் பின்பற்றி நாங்கள், ஒரு பத்துப் பேர் அந்த உருவத்தை கையாண்டிருக்கிறோம், ஆனால், வ. ரா, வ. ரா.தான். அடுத்து அவருடைய கட்டுரைகள். 'அவை நூதனமாக இருந்தன. கட்டுரை படிப்பதாகவே தோன்றவில்லை. யாரோ நேரே பேசுவதுபோல இருந்தது' என்று ஸ்ரீ பெ. கோ. சுந்தரராஜன் (சிட்டி) எழுதினதுபோல, வ. ரா.வின் கட்டுரைகளும் ஒரு புது உருவ வார்ப்பானவை. ஆர்ப்பாட்ட பீடிகை போட்டு எங்கோ ஆரம்பித்து, எப்படியோ போய். எதிலோ போய் முடிகிற மாதிரி இருக்காது. எடுப்பிலேயே கியாலப் மாதிரி எகிறும். நேரடியாக விவகாரமாக, அடிப்படை விஷயத்தை தொட்டு அதன் மேலேயே விவகாரம் வளரும். பேசுகிற மாதிரி நடை. நம்மோடு பேசும். வ. ரா. சம்பாஷணையில் திறமைசாலி. அந்த சம்பாஷணை நடைதான் எழுத்திலும். குறுகின சொல் அளவுக்குள்ளே நீண்ட கருத்து யாத்திரை செய்து முடித்த அனுபவத்தை உணரவைக்கும் அவர் எழுத்துக்கள். படித்த மனதிலே எதிரொலி

கிளப்பிக்கொண்டே இருக்கும். தான் சிந்தித்ததோடு கேட்பவனையும் சிந்திக்கத் தூண்டும் ஒரு வேகம் அந்த கட்டுரைக் கோப்பிலே, நடையிலே காணலாம். அன்றய தமிழகம் சிந்திக்க முற்படவேண்டும் என்ற ஒரே ஆசை வ. ரா.வுக்கு. அதுக்கு தன் வாழ்வை, படைப்பு சக்தியை அர்ப்பணித்தவர் வ. ரா.

அவருடைய முற்போக்குக் கொள்கைகளைப் பற்றி நான் எதுவும் விளக்க, விவரிக்க. தாங்கிப் பேச அவசியமே இல்லை. வ. ரா. வின் ஒவ்வொரு வரியும் அதைத் தானே பேசும். அவரது மூச்சே அதாச்சே. இன்று முற்போக்குவாதிகள் என்று சுயபட்டம் சூட்டிக் கொண்டு தம்பட்டம் அடிக்கிற படைப்பாளர்கள் செய்கிறதுக்கும், செய்கிறதாக சொல்லிக்கொள்வதுக்கும் பலமடங்கு மேலாக, அவர் சொல்லிக்கொள்ளாமலே சாதித்துவிட்டுப் போயிருக்கிறார். தன் சிந்தனைகளுக்கு வெளிவிளக்கமாக அவர், அன்று உருவாக்கியுள்ள படைப்புகளை நாம் இன்று ரசிக்க முற்படுவோம்.

சொர்க்கத்தில் சம்பாஷணை ஒரு புதுசு. பூலோக வாழ்க்கையில் ஏகதேசம் ஒரு துறை வாழ்வு அல்லது ஒருதுறை ஈடுபாடு கொண்டிருந்தவர்கள் சொர்க்கத்தில் சந்திக்கிறபோது இப்படி சம்பாஷித்திருக்கக் கூடும் என்ற யூகத்தில் சித்தரித்திருக்கிறார் வ. ரா. தங்களை அன்று முன்னோக்கி இருந்த பிரச்னைகளுக்கு தாங்கள் ஈடுகொடுத்ததை அவைகளுக்குப் பின் இருந்த தங்கள் உணர்வோட்டத்தை, மனநிலையை. பார்வையை-அதாவது தங்கள் அந்தரங்கங்களாக இருந்தவைகளை— சொல்லி, பேசி, விவாதிக்க நியாயானியாயம் பார்க்க வைக்கிறார் வ. ரா. கதாபாத்திரங்களின் உண்மை உள் மனப்போக்கு நமக்குத் தெரியாது, காவியங்களில், கவிதைகளில்அவர்களதுசொற்கள்மூலம்தெரியவருவதைத் தவிர. இரண்டாவது சுயம்வரம் ஏற்பாடு செய்ததுக்கு தமயந்தி சொர்க்கத்தில் கூறிய காரணம், பாஜி பிரபுவை தான் போருக்கு அனுப்பியது பற்றி சிவாஜி வெளியிடும் சந்தேகங்களும் அந்தரங்கமும் போன்றவைகள், மூலகாவிய, சரித்திர உண்மைகளாக இல்லாமல் இருக்கலாம். கற்பனைப் படைப்பு உலகத்து. இலக்கிய உலகத்து உண்மைகள் அவை. புராணம், காவியம், சரித்திரம் இவைகளை அந்த அளவுக்கு தன் வழியில் கையாள படைப்பாளிக்குத்தான் உரிமை உண்டே.

கதைகளிலோ நாவல்களிலோ, சிந்தனையாளரான, சீர்திருத்தக்காரரான வ. ராவுக்கு மறைந்து நிற்கத் தெரியாது. வ. ராவை நெடுக பார்த்துக் கொண்டே இருக்கலாம். ஆனால் 'சொர்க்கத்தில் சம்பாஷணை' யில் அந்த வ. ரா. பயந்து, தயங்கியே தலைநீட்டுகிறார். அதனால்தான் சொர்க்கத்தில் சம்பாஷணை ஒரு கலா ரீதியான சாதனை. இருந்தாலும் ஒரு சூட்சுமமான வாசகனுக்கு அவர் தப்பிவிட முடியாது.

இந்த நூல் வெளிவருவதைப்பற்றி சில வார்த்தைகள். அறுபத்தி இரண்டு ஆண்டுகள் வாழ்ந்து 1951ல் (23-8-51) மறைந்தார் வ. ரா. பதிமூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன அவருக்குப்பின். அதுக்குமுன் வெளியான பதினெட்டு புத்தகங்களைத் தவிர இந்த பதிமூன்று ஆண்டுக் காலத்தில் ஒரு புது நூல்கூட அவருடையது வெளிவரவே இல்லை. சில பழசுகள்கூட மறுபதிப்பு வெளிவரவே இல்லை. ஒரு முப்பது ஆண்டுக் காலத்துக்கு மேலாக சிந்தித்து சிந்தித்து, மனம் புழுங்கி, வெடித்து, சீறிக் கொட்டின அவரது எழுத்துக்கள் இன்னும் எவ்வளவு இருக்கிறது வெளிவர! இலக்கியத்துறையில் தலைசிறந்த தனியொரு சிந்தனையாளராக இன்றுவரைக்கும் நிற்பவர் வ. ரா. பதிமூன்று ஆண்டு சூன்ய நாட்களுக்குப் பின் 'சுவர்க்கத்தில் சம்பாஷணை' வெளிவருகிறது, எழுத்து பிரசுரம் வெளியீடாக இந்த சம்பாஷணைகள் 1940–ல் சென்னை அகில இந்திய ரேடியோவில் தொடர்ச்சியாக ஒலி பரப்பப்பட்டவை ஆகும்.

இவைகளை வெளியிட வ. ரா.வின் மனைவி ஸ்ரீமதி புவனேஸ்வரி வ. ரா. அனுமதி தந்ததுக்கு சம்பிரதாயமாக நான் நன்றி தெரிவித்தால் மட்டும் போதாது. வ. ரா.வின் வெளிவராத பாக்கி படைப்புகள் அத்தனையும் புத்தகங்களாக வாசகர்களுக்கு கிடைக்க வகை செய்து வ. ரா.வுக்கு என் கடமையை செய்கிற போதுதான் முழு நன்றி தெரிவித்ததாக ஆகும். இன்றய தமிழகத்துக்கு வ ரா.வின் அன்றய சிந்தனைகள் தெரிந்தாக வேண்டும். அது தெரிந்தவர்கள் இடையே இருந்து இலக்கியத்துறையில் அவர் போன்ற சிந்தனையாளர்கள் தோன்ற வேண்டும்.

சென்னை—12-6-64 **சி. சு. செல்லப்பா**

பச்சையப்பர்—பட்டினத்தார்

[அழகான சோலை. சோலையின் நடுநாயகமாக விளங்கும் மரத்தின் நிழலில் கம்பீரமான உருவமும் தோற்றமும் கொண்ட ஒருவர் வீற்றிருக்கிறார். பக்கத்தில் காக்கை இறகு போன்ற நீர் ஓடும் ஓடை. விலை மதிக்க முடியாத குளிர்ந்த தென்றல் காற்று. நிழலில் அமர்ந்திருக்கும் பெரியார் சிறிது நேரம் கண்ணைத் திறந்து கொண்டும், சிறிது நேரம் கண்ணை மூடிக்கொண்டும் பிரார்த்தனையில் ஆழ்ந்து, மெல்லிய தொனியில் பாடிக் கொண்டிருக்கிறார்.]

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகற்றானை,
அணுவையார்க்கும் தெரியாத தத்துவனை,
தேனை, பாலை, திகழ் ஒளியை
தேவர்கள்தம் கோனை,
மற்றக்கரியானை நான்முகனை கனலை, காற்றை......

ஆகா! என்ன திவ்யமான காற்று! காற்றுதான் கடவுள். மனிதன், விலங்கு—உயிருள்ள பொருள்களெல்லாம் வாங்கி விடும் மூச்சு காற்றுத்தானே? காற்று உடலுக்குள் இருந்தால், உயிர். அது வெளியேறி விட்டால், அந்த உடல், சவம். என்ன விசித்திரம்! ஆண்டவனுடைய அற்புத லீலையை, என்னென்று சொல்லுவது ?

இந்த சோலையும் இதனடுவே ஓடும் நீரோடையும் இந்த அற்புதமான ஆரோக்கியக் காற்றும், பட்டினத்தார் சமாதி அடைந்த திருவொற்றியூரை, எனக்கு நினைப்பு உண்டாக்குகிறது.........

(பட்டினத்தார் திடீரென்று தோன்றுகிறார்)

பட்டினத்தார்—திருவொற்றியூரை இவனுக்கு நினைப்பூட்டியது யார்?

பச்சையப்பர்—நான்தான் பச்சையப்பன். தாங்கள் யாரோ ?

பட்டினத்தார்—யாரோ திருவொற்றியூரில் சமாதி அடைந்ததாக நீங்கள் சொன்னீர்களே, அவன்தான் இவன்.

பச்சையப்பர்—யார், பட்டினத்தடிகளா ? அப்படியா?

பட்டினத்தார்—அவனே! பச்சையப்பரே ! உங்களைப்பற்றி இவன் வெகுவாக கேள்விப்பட்டிருக்கிறான். வாரும்! வாரும்!

பச்சையப்பர்—நான் தன்னந்தனியே, இந்த நீரோடைக்குப் பக்கத்தில், நிழலில் அமர்ந்து தியானம் செய்துகொண்டிருந்தேன். அந்தத் தருணத்தில், எனக்கு திருவொற்றியூரின் நினைவு உண்டாயிற்று. தாங்களும் திருவொற்றியூரும் ஒன்றுதானே? உடனே, தங்கள் நினைவு ஏற்பட்டது...

பட்டினத்தார்—இந்த மரத்தின் நிழலில் உட்கார்ந்து, நினைத்தது நடக்கும். ஆகையால், இவன் உடனே இங்கே வந்தான்.

பச்சையப்பர்—எப்படி? விளங்கவில்லையே?

பட்டினத்தார்—நீங்கள் இப்பொழுது அமர்ந்திருப்பது, கல்பக விருக்ஷத்தின் கீழ். அதன் கீழ் இருந்துகொண்டு எதை நினைத்தாலும் அந்த நினைப்பு, உடனே பலித்து, உருவாகிவிடும்.

பச்சையப்பர்—ஆகா அப்படியா ? என்னுடைய மனோரதம் பூர்த்தியாகிவிட்டது, நீண்டகாலமாக, தங்களை, சொர்க்கத்தில் சந்திக்க வேண்டும் என்பது எனது பேரவா. தங்களைப் பார்க்கும் பாக்கியம் இன்றைக்குக் கிடைத்தது. இந்தக் காற்று, காற்றாக இல்லை, நெஞ்சை அள்ளும் கானமாக இருக்கிறது.

(மேல்நாட்டு சங்கீத முழக்கம்)

இது நமது தமிழ் நாட்டு சங்கீதம் அல்லப்போலிருக்கிறதே!

(பட்டினத்தார் சிரிக்கிருர்)

பச்சையப்பர்—என் அறியாமையை கண்டு தாங்கள் சிரிக்கிறீர்களா? ஏன் சிரிப்பு?

பட்டினத்தார்—சொர்க்கம் என்பது சாகரம். ஆகாயத்திலிருந்து விழும் மழைத் துளிகள், நேராகவோ அல்லது ஆருகவோ அல்லது ஊற்ருகவோ, சமுத்திரத்தில் வந்து சேர்ந்து விடுவதுபோல, பூலோகத்தில் பாடுபட்டுத் தேடிய நல்ல பொருள்களும் புண்ணியவதிகள் புண்ணியவான்களும் சொர்க்கத்தில் வந்து சேருவது இயல்பு.

பச்சையப்பர்—உண்மைதான். நாம் கேட்ட சங்கீதம் எந்த நாட்டை சேர்ந்தது?

பட்டினத்தார்—போலந்து நாட்டு சங்கீதம்.

பச்சையப்பர்—இப்பொழுது தான் நினைவு வருகிறது. உடலைத் துண்டு துண்டாக்கியும் உயிர் அழியாத போலந்து நாடு.

பட்டினத்தார்—உடல் சித்திரவதை செய்யப்பட்டும், உயிர் மங்காத உத்தமமான அந்த நாடுதான்.

பச்சையப்பர்—சித்திரவதை என்று சொன்னவுடனே வேறென்று எனக்கு நினைவு வருகிறது. தாங்கள் நரகத்தை பார்த்திருக்கிறீர்களா? அங்கே சித்திரவதை செய்கிருர்களா?

(பட்டினத்தார் கலகல வென்று சிரிக்கிருர்)

பட்டினத்தார்—மண்ணுசை தான் நரகம்; பெண்ணுசைதான் நரகம்; பொன்னுசை தான் நரகம். அந்த நரக வேதனைகளை பூரணமாக அனுபவித்த இவனைப் பார்த்து அந்த கேள்வி கேட்டது சிரிப்பை உண்டாக்கிற்று.

பச்சையப்பர்—ஆசை தான் நரகத்துக்கு விதை என்கிறீர்கள்.

பட்டினத்தார்—அப்படித்தான் இவன் கருத்து.

பச்சையப்பர்—பிறவிப்பிணி ஒழியவேண்டும் என்று பக்தர்கள் கொள்ளும் ஆசையும் நரகத்துக்கு விதை தானே?

பட்டினத்தார்—ஒருவாறு உண்மை.

பச்சையப்பர்.—பிரபஞ்சத்தைப் படைத்த ஆண்டவனும், ஆசையால் தூண்டப் பெற்றுத்தான் பிரபஞ்சத்தைப் படைத்தானே?

பட்டினத்தார்.—அதற்கு ஆசை என்று பெயர் அல்ல, அதற்கு லீலே என்று பெயர்.

பச்சையப்பர்—சிறியவர்களின் இச்சைக்கு ஆசை என்று பெயர். பெரியவர்களின் இச்சை மனேபீஷ்டம் போலிருக்கிறது.

பட்டினத்தார்—குழந்தையின் பேச்சு மழலே, கோபம் கொண்டவன் பேச்சு வசவு. கவிகளின் பேச்சு அருள் வாக்கு, ஞானிகளின் பேச்சு திருவாக்கு, ஒவ்வொன்றிற்கும் தாரதம்யம் கிடையாதா?

பச்சையப்பர்—வித்யாசம் உண்டு. ஆனுல், அதனுல் ஒருவித தன் மயக்கம் உண்டாகி விடும்.

பட்டினத்தார்—எப்படி?

பச்சையப்பர்—தன் மயக்கத்தாலும், தானே வருவித்துக்கொண்ட மன வேதனையாலும் மனிதன் துன்புறுகிருன்.

பட்டினத்தார்—அப்படியா?

பச்சையப்பர்—வீட்டைப் பாழாக்குவது பெருச்சாளி; நாட்டைப் பாழாக்குவது தன் மயக்கத் தத்துவம்.

(பட்டினத்தார் சிரிக்கிருர்)

தாங்கள் சிரிக்கலாம். தங்களிடம் எனக்கு இருக்கும் பக்தியை அளவிட்டுச் சொல்ல முடியாது. தங்களுடைய துறவைக் கண்டு உலகம் நடுங்கிப் போயிருக்கிறது. அந்தத் துறவியின் மாண்பு எழுத்தில் அடங்காத ஒன்று. ஏட்டில் அடங்காத ஒன்று. ஆனுல் தங்கள் வாழ்க்கையின் அஸ்திவாரத்தைத் தோண்டிப் பார்த்தால் தன் மயக்கத்தைத்தான் காணமுடியும்,

பட்டினத்தார்—எப்படி?

பச்சையப்பர்—பெண்ணுகி வந்ததொரு மாயப் பிசாசு என்று ஒரு பாட்டு தாங்கள் பாடியிருப்பது உங்களுக்கு நினைவு வருகிறதா ?

பட்டினத்தார்—நன்ருக நினைவு இருக்கிறது.

பச்சையப்பர்—பெண், யாரோ ஒருவள் என்று எண்ணி விட்டீர்களே? அந்தப் பெண், உங்கள் தாயல்லவா? உங்களை முந்தித் தவம் கிடந்து முன்னூறு நாட் சுமந்து அந்தி பகலாய்ச் சிவனை ஆதரித்து, தொந்தி சரிய பெற்றெடுத்த உங்கள் தாய் பிசாசா?

(ஒரு குரல் கேட்கிறது : அது பெண் குரல்)

குரல்—பெண்ணுகி வந்ததொரு மாயப் பிசாசு... என்று நீ பாடினுயா அப்பா?

பட்டினத்தார்—என் அருமைத் தாயின் குரல்போலிருக்கிறதே!

அம்மா, நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?

குரல்—பெண்ணுகி வந்ததொரு மாயப் பிசாசு என்று நீ பாடினுயா?

பட்டினத்தார்—ஆமாம், அம்மா. தங்களைப் போன்ற உத்தமிகளை அது குறிக்காது. அயல் வளவு சென்று கைப்பிடி நாயகனுக்குத் தெரியாமல், இன்பம் அனுபவித்துத் திரும்பிவரும் அதம ஸ்திரீகளையே என் மனசில் வைத்துக்கொண்டு, பாடிவிட்டேன்.

குரல்—நீ சொல்லுவது தவறு. பொதுப்படையாக பெண்ணைப் பற்றி நீ இழிவாகப் பேசிவிட்டு அது சிலரைக் குறிக்காது, சிலரைக் குறிக்கும் என்று பேதாபேதத்தை கற்பனை செய்வது தவறு. துஷ்டப்பிள்ளைக்கு ஊரார் புத்தி சொல்லுவார்கள் என்பது போல், என் அருமை மகனுக்கு பச்சையப்பன் புத்தி சொல்ல வந்து விட்டானே!

பச்சையப்பர்—தீவிர வைராக்கிய மூர்த்தியான பட்டினத்தடிகளை நான் துஷ்டப்பிள்ளை என்று கருதுவதாவது? கனவிலும் நேரக்கூடிய சங்கதி அல்லவே?

பட்டினத்தார்—அம்மா! உங்கள் மனம் நோகும் படியாக பாடியதற்கு, எத்தனை ஜன்மங்களாகப் பாபம் செய்திருக்க வேண்டுமோ? நான் மகா பாபி!

பச்சையப்பர்—தாங்கள் மனம் நோகலாகாது. இந்தப் பேச்சை நான் எடுத்ததினு லல்லவா, இந்த துக்ககரமான காட்சி தோன்றிற்று? நான் செய்தது தவறு.

குரல்—பச்சையப்பா! நீ செய்தது தவறல்ல. ஒரு கொள்கைக்காகப் பேசினுய் நீ. என்னையாவது, என் மகனையாவது மனதில் துன்புறுத்த வேண்டுமென்பது உன் நோக்கமல்ல. நான் வருகிறேன்; மகனே, நான் போய் வருகிறேன்.

பட்டினத்தார் (விம்மி அழுங்குரலோடு),—பச்சை யப்பரால், அருமைத் தாயின் குரலை மீண்டும் கேட்கும் பாக்கியம் இவனுக்குக் கிடைத்தது அம்மா......இருக் கட்டும். இவனுக்கு தன் மயக்கம் என்றீரே, அதைச் சொல்லும்.

பச்சையப்பர்—பெண்ணைத் தாங்கள் இழிவாகப் பேசினது ஒருபுறமிருக்கட்டும். அவர்கள் ஆண்களை மயக்கிக் கெடுத்துவிடுகிறுர்கள் என்ற பழியைப் பெண் களின்பேரில் சுமத்த, ஆண்களை தாங்கள் அவமானப் படுத்தலாமா? ஸ்திரீ சபலத்தை எதிர்த்து நிற்கமுடி யாதவர்களா ஆண் பிள்ளைகள்? அவ்வளவு பலவீனர் களா? பெண்ணைப் பிசாசு என்றதும் ஆண் பேயால் அடிபடும் பலவீனன் என்று தாங்கள் குறிப்பிட்டிருப் பதும் தன் மயக்கம் ஆகும்.

(பீரங்கிச் சத்தம், துப்பாக்கி சத்தம், குதிரைப் படை, காலாட் படை சத்தம்)

பட்டினத்தார்—கடும் போரின் சத்தம்.

பச்சையப்பர்—ஆமாம்! தங்கள் திருஷ்டிக்குத் தெரியாததல்ல. இப்பொழுது பூலோகத்தில் அசுரத் தனமான போர் ஒன்று நடக்கிறது தங்களுக்குத் தெரி யாதா? ''ஆண் உயர்ந்தவன்; ஆர்யன் உயர்ந்தவன் ஜர்மானியன் ஆரியன்'' என்ற தன் மயக்கம் தலைக்

கேறிக் கிறுக்கும் மகா பலிஷ்டனுன ஹிட்லரின் தன் மயக்கப் பைத்தியம்தான் இந்தப்போருக்குக் காரணம். போர் எல்லாம் தன் மயக்கத்தின் விளைவு.

பட்டினத்தார்—பெண்ணுகி வந்ததொரு மாயப் பிசாசு என்று பாடிய மனேபாவம் தவறு என்று சொல்லுகிறீர்களா ?

பச்சையப்பர்—தவறு என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. தெளிவுதான் வாழ்க்கைத் தத்துவத் துக்கு அடிப்படையாக இருக்கவேண்டும். தன் மயக்க மல்ல. ஆண்கள் பலவீனர்களாயிருந்து பெண்களின் வலையில் சிக்கிக்கொண்டால், அதற்காக பெண்கள் என்ன செய்வார்கள்?

பட்டினத்தார்—பெண்கள் ஆண்களின் பெரிய லட்சியத்துக்கு உதவியாக இருக்கக்கூடாதா?

பச்சையப்பர்—அவர்கள் கண்டிப்பாக உதவியாக இருப்பார்கள். ஆனுல், அது, அவர்களை ஆண்கள் எப்படி மதிக்கிருர்கள் என்பதையே பெரும்பாலும் பொறுத்திருக்கிறது.

பட்டினத்தார்—நீங்கள் சொல்லுவது உண்மை யென்றுதான் இப்பொழுது இவனுக்குப் படுகிறது. (சிரித்துக்கொண்டு) இவன் பேரில் வேறு ஏதேனும் குற்றச்சாட்டு உண்டோ?

பச்சையப்பர்—நான் முதலிலேயே தெரிவித்துக் கொண்டேன், தங்களுடைய துறவு, உலகம் பார்த்து நடுநடுங்கிப்போன துறவு என்று. கணக்கிலடங்காத செல்வத்தில் புரண்டு கொண்டிருந்த தாங்கள் எல்லா வற்றையும் அடியோடு துறந்து, ''விமலர் தந்த ஓடு நமக்கு வற்ருத பாத்திரம்'' என்ற நிலைமையை அங்கீ காரம் செய்தது யாரும் பார்த்து பொறி தட்டிப் போகும் காட்சியாகும்.

பட்டினத்தார்—(புன்முறுவலோடு) அது ஒரு பிரமாதமான காரியமல்ல.

பச்சையப்பர்—(சிரித்துக்கொண்டு) கோடிக்கணக் கில் செல்வத்தைத் துறந்த தங்களுக்கு எவ்வளவு

வைராக்கியம் இருந்திருக்கவேண்டும்? எவ்வளவு துணிவு இருந்திருக்க வேண்டும்? இவ்வளவு துணிவு கொண்ட தங்களை பெண் இனம் பயமுறுத்தினதுதான் ஆச்சரியமாயிருக்கிறது.

பட்டினத்தார்—அப்புறம்?

பச்சையப்பர்—தங்கள் வாழ்க்கையைக் கண்டு உலகம் பிரமித்துப் போகுமே யொழிய, அதை பின் பற்ற முடியாது.

பட்டினத்தார்—அப்படியா?

பச்சையப்பர்—தாங்கள் செல்வத்தை யெல்லாம் சூருவளி விட்டதைப்போல எல்லாரும் செய்ய முடியுமா? அப்படி எல்லாரும் செய்வார்களாகில், விமலர் தந்த வற்றுத பாத்திரமான ஓட்டுக்கு யார் அன்னம் இடமுடியும்? எல்லாரும் பிச்சை எடுப்பவர்களாக ஆகிவிட்டால் பிச்சை போடுவதற்கு யார் மிஞ்சுவார்கள் ?

பட்டினத்தார்—ஒருவரும் மிஞ்சவேண்டாமே ? பிச்சை என்பது உலகத்தை விட்டு ஒழிந்து போய் விடுமல்லவா?

பச்சையப்பர்—உலகத்தில் மனிதனுக்குப் பசியும் வறுமையும் இருக்கும் வரையில், அவன் ஏதாவது ஒரு வகையில் பிச்சை எடுக்கத்தான் செய்வான். ஆகவே, வறுமையைப்போக்கவேண்டும். பசி, தாகம், முதலிய இயற்கைத் தேவைகளை கட்டுக்குள் கொண்டுவந்து, மனிதர்களை நல்வழிப்படுத்தலாமே யொழிய அவை களின் பேரில் காய்ந்து விழுந்து, மனசை வேதனைப் படுத்திக் கொள்வதால் அல்ல.

பட்டினத்தார்—சன்னியாசம் கூடாதென்கிறீர்கள்!

பச்சையப்பர்—எல்லோரும் ராஜா ஆகிவிட்டால், பல்லக்குத் தூக்குவது யார் என்று தமிழ் நாட்டிலே சொல்லிக்கொள்ளுவதுண்டு. எல்லோரும் இல்வாழ்க்கையைத் துறந்தால், பிரபஞ்ச உற்பத்தி எவ்வாறு நடைபெறும்?

பட்டினத்தார்—பிரபஞ்ச உற்பத்தி நடைபெற வேண்டாமே?

பச்சையப்பர்—ஆண்டவன் படைத்த உலகத்தில் ஆசைகள் இருக்கும் வரையில், பிரபஞ்ச உற்பத்தி நடந்து கொண்டுதான் இருக்கும். என்றைக்கு ஆண்டவன், உயிர்களை ஆசையின்றிப் படைக்கிறானோ, அப்பொழுதுதான், அந்த தலைமுறையில்தான், படைப்பு யாவும் அழிந்து போய்விடலாம். ஆனால்...

பட்டினத்தார்—ஆனால் என்ன?

பச்சையப்பர்—படைப்பு ஒரு நாளும் அழியப் போவதில்லை. இயற்கை ஆசைகளும் ஒருநாளும் ஒழியப் போவதில்லை. ஆகவே, அவைகளை கட்டுக்குள் வைத்து, நேர்த்தியான, பலசாலியான வாழ்க்கையை நடத்த மனிதன் முயலுவது தான் புத்திசாலித்தனம். பானை இருப்பதாலா சோறு இருக்கிறது? பசியினால் சோறு இருக்கிறது. இதை மறந்து விட்டு, பானையை உடைக்கப் பார்ப்பது தவறு.

பட்டினத்தார்—அப்படியா? இவன் உலகத்துக்கு, அவனுடைய துறவினால், அவ்வளவு தீமையை உண்டாக்கி விட்டானா?

பச்சையப்பர்—ஒருவாறு உண்மை, அது மட்டுமல்ல. கண்ட கதைகளை யெல்லாம் கட்டி விட்டிருக்கிறார்கள். தாங்கள், துறவுபூண்ட பிறகு ஒரு விலைமாதின் வீட்டுக்கு, தாடி மீசை நிறைந்த கோரமான உருவத்துடன் போனதாகவும் இச்சைப் பூர்த்திக்காக அவளைத் தாங்கள் அழைத்ததாகவும்.........

பட்டினத்தார்—என்ன பொய்! மிகக் கேவலமான பொய்!

பச்சையப்பர்—தாங்கள் வாரி இறைத்த பொருளைக் கொண்டு, தமிழர்களை கல்வியிலும் குணத்திலும் உயர்த்தும்படியான சாதனங்களைக் கண்டிருந்தால், மேலே குறிப்பிட்ட கதைகளைப் போல, ஒன்றும் தோன்றியிருக்காது.

பட்டினத்தார்—உண்மை என்றே தோன்றுகிறது.

வ. ரா.

பச்சையப்பர்—

நம்பினுர் கெடுவதில்லை நான்மறையின் தீர்ப்பு
அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம்
பெறலாம்.

(பட்டினத்தாரும் கூடப் பாடுகிருர்)

[இருவரும் மறைவு]

கண்ணகி—
ஆண்டாள்

ஆண்டாள்—இவ்வளவு காலம் சொர்க்கத்தில் இருந்தும், இந்த திவ்யமான பிரதேசத்தை, இது வரையில் நான் காணாதது ஆச்சரியமே! வடபெருங் கோயிலான் திருப்பள்ளியில் எழுந்தருளி, நித்திய சூரி களுக்கு சேவை சாதிக்கும் பொன்னரங்க க்ஷேத்திர மாகத் தோன்றுகிறதே! ஸ்ரீரங்கத்தை வடக்கே, வட திருக்காவிரியும் தென்புறத்தில், தென் திருக்காவிரியும் கட்டி அணைத்துப் பிரவாகமாகச் செல்லும் காட்சி கண் கொள்ளாக்காட்சி, கனி மரங்களும் பூஞ்செடிகளும், இளங்கொடிகளும் பூரிப்படைந்து கீதம் பாடுவதைப் போல, அழகு செய்து நிற்கும் சோலைகள் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தின் தனிச்சிறப்பேயாகும்.

இவ்வளவு அற்புதமான ஸன்னிவேசத்தைக் கண் டும் 'ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்' பாடாமல் இருக்கமுடியுமா?

வையத்து வாழ்வீர்காள் நாமும் நம் பாவைக்கு
செய்யும் கிரிசைகள் கேளீரோ—பாற்கடலுள்
பையத்துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பால் உண்ணோம் நாட்காலே
[நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோ
[தோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி
உய்யுமாறெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்

கண்ணகி—தோழி தேவந்தி! நீ எங்கிருந்து பாடு கிறாய்? உன் குரல் மாதிரி இருக்கிறதே! அன்றைக்கு

நீ என்னிடம் காவிரிப்பூம்பட்டினத்தில், என் காதலன் வருகைக்காக நோன்பு நூற்கவேண்டும் என்று சொன்னுயே, அதையெல்லாம் பாட்டில் அமைத்துப் பாடுகின்ருயா? தேவந்தி! ஒளிந்து நின்றுகொண்டு, என்னை இம்சை செய்யாதே: உள்ளதைச் சொல்.

ஆண்டாள்—அம்மா! இப்பொழுது பாடினது யார் என்று கேட்கிறீர்களா? தேவந்தி அல்ல. நான்தான் ஆண்டாள். வில்லிபுத்தூர் வேதியன் விஷ்ணு சித்தனின் திருமகள். திருவரங்கத்தில் பள்ளிகொண்டிருக்கும் மாதவனது மணமகள். எனக்கு, சூடிக் கொடுத்த நாச்சியார் என்றும் ஒரு பெயருண்டு.

கண்ணகி—வில்லிபுத்தூர் தங்கை கோதையா? மாலவனை மாமிதன் மகனுகக்கொண்ட மாபெரும் பாக்கியசாலியா? பெரியாழ்வார் தமது திருக்கரங்களால் போற்றி வளர்த்த திருமகளா? நாமகளின் திருவவதாரமா? இன்றைக்கு எனக்கு சொல்லில் அடங்காத அதிர்ஷ்டம்!

ஆண்டாள்—நீங்கள் யார் என்று சொல்லாமல், என்னை நீங்கள் வானம் முட்டும்படியாகப் புகழ்ந்து விட்டீர்களே! ஆமாம்! அப்படிச் செய்வதுதான் பெரியார்களின் தன்மை.

கண்ணகி—தங்கை! நான் அபாக்கியவதி. சோழ நாட்டில் ஜன்மம் எடுத்து, பாண்டி நாட்டில் துயரக் கடலில் மூழ்கிப்போய், சேர நாட்டில் உயிர் நீத்த ஒரு நாடோடி!

ஆண்டாள்—அக்கா! நீங்கள், பத்தினித் தெய்வம் கண்ணகிதானே? உங்கள் திருவாயால், நீங்கள் அபாக்கியவதி என்றும், நாடோடி என்றும் சொல்லுதல் தகுமா? உங்கள் பெருமையை உணராத நாடு, அபாக்கிய நாடு. உங்கள் காதலின் மாண்பையும் கடமையின் சிறப்பையும் உணராத உங்கள் புருஷன் அபாக்கியவான்...

கண்ணகி—தங்கை! என் புருஷனைப்பற்றி நீ சொல்லுவது சரியல்ல. அது அவரது முன்வினையின்

பயன். அதிருக்கட்டும். அம்மா! நீ கலியாணம் வேண்டாம் என்று ஏன் தீர்க்க வைராக்கியம் கொண்டாய்?

ஆண்டாள்—அக்காள் கண்ணகியின் வாழ்க்கையைப் பார்த்து, தங்கை ஆண்டாள் புத்தி கற்றுக் கொண்டாள்.

(இருவரும் சிரிக்கிறார்கள்)

கண்ணகி—விகடம் இருக்கட்டும், அம்மா! விஷயத்தைச் சொல்லு.

ஆண்டாள்—உங்கள் வாழ்க்கையை ஆதிமுதல் அந்தம்வரையில் உன்னிப்பாகக் கவனித்துப் பார்க்கும் மானமும் ரோஷமுமுள்ள தமிழ்ப்பெண், கலியாணத்தை பெருமையாக நினைக்கலாமா? நினைப்பாளா? ஆண்பிள்ளையை மணந்து அலமலந்து கண்ணீர் வடிப்பதைக் காட்டிலும், அமரர் பிரான் அடி சேருவதே உத்தமம் என்று எண்ணவேண்டாமா?

கண்ணகி—தங்கை! நீ முரட்டுக் கட்சி பேசுகிறாய்.

ஆண்டாள்—நான், வாழ்க்கையில், உங்களைப் போல துவண்டவளா? ஒருக்கால், முரட்டுத்தனமாய், கட்சி பேசவும் கூடும். இருக்கட்டும். நீங்களும் உங்கள் புருஷனும் சிறிது காலம் தனிக்குடித்தனம் செய்து, காவிரிப்பூம்பட்டினத்தில், இல்லறம் நடத்தினீர்களே, அப்பொழுது, உங்களைப் பார்த்து, உங்கள் புருஷன் எப்படிக் கொஞ்சினார்?

கண்ணகி—வெட்கப்படும்படியாக, கேள்வியைக் கேட்கிறாயே?

ஆண்டாள்—சொர்க்கத்தில் வெட்கம் இல்லை. இருக்கிறபடி இருந்தால், பூலோகத்திலும், வெட்கம் தேவையில்லை, சொல்லுங்கள்.

கண்ணகி—எனக்கு ரொம்பவும் கூச்சமாயிருக்கிறது.

ஆண்டாள்—கூச்சத்தைக் கசக்கி எறிந்துவிட்டு, சொல்லுங்கள்.

கண்ணகி--சொல்லுகிறேன் கேள்.

மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும் பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!
யாழிடைப் பிறவா இசையே என்கோ!

ஆமாம்! எனக்கு எதற்கு கூச்சம்? இந்த மாதிரி என்னைப் பார்த்து கொஞ்சினது உண்மை.

ஆண்டாள்—இவ்வாறு மெய்மறந்து சொக்கிப் போனவரைப்போல கொஞ்சின உங்கள் புருஷன், மாதவி வீட்டுக்குள் எப்படி அடி எடுத்து வைத்தார்? எப்படி அடி எடுத்து வைக்கலாம்?

கண்ணகி—தங்கை! நீ ரொம்ப பொல்லாதவள்! முதலில் அந்தக் கேள்வியைக் கேட்டபோது, நீ எதற்காகக் கேட்டாய் என்று எனக்கு விளங்கவேயில்லை. விளங்கியிருந்தால், சொல்லியிருக்கமாட்டேன்.

ஆண்டாள்—முழுப் பூசனியை சோற்றுக்குள் மறைக்க முடியாது. உண்மையை, உடம்புக்குள் அடைத்து, அரக்கு வைத்து மூடிவைக்க முடியாது.

கண்ணகி—தங்கை! நீ சொல்லுகிறது உண்மை தான்.

ஆண்டாள்—முத்தே, கரும்பே, வீணையின் நாதமே என்று காதினிலே தேன் வந்து பாயும்படியாக காதல் வெள்ளத்தால் கரை புரண்டு உருண்டவர் போல கரைந்துருகும் ஒருவருக்கு நாக்கு ஒன்றுய்த் தானே இருக்கவேண்டும்?

கண்ணகி—என் புருஷன் ஒரு நெறிபற்றி ஒழுகாதது அவரது முன்வினைப் பயன்.

ஆண்டாள்—அக்கா! முன்வினைப் பயன் என்று வேறு சங்கதிகளில் சொல்லுங்கள். நான் ஒப்புக்

கொண்டாலும், ஒப்புக்கொள்ளுவேன். இந்த விஷயத்தில் மட்டும், அதை என்னால் ஒப்புக்கொள்ளமுடியாது. கெஞ்சுவதும், பின்னர் கைவிடுவதும், கைவிட்ட பின்னர், இரக்கமின்றி, பெண்பேரில் பழி சுமத்துவதும் ஆண்பிள்ளைகளின் இயல்பு.

கண்ணகி—நல்லவேளை! இந்த இடத்தில் இந்த நேரத்தில், ஒரு ஆண்பிள்ளையும் இல்லை.

ஆண்டாள்—இருந்தால், அவர்கள் உங்களைக் கெஞ்சுவார்கள்; என்பேரில் பழி சுமத்திப் படாடோபமாய்ப் பேசுவார்கள்.

கண்ணகி—தங்கை! உன்னுடையது முரட்டுக் கட்சியானாலும், அதில் உண்மை இருக்கிறது. ஆனால், அதை ஆகாயத்தில் தூற்றுவதால், பயன் உண்டாமா? சரி, உன், அற்புதமான குயில் பாட்டில் ஒன்று பாடு.

ஆண்டாள்—காதலிப்பது பெண்ணின் இயல்பு, கைவிடுவது ஆணின் சுபாவம் என்பதை ருசுப் படுத்தவா?

கண்ணகி—எதற்கென்று பின்னால் பேசிக்கொள்ளுவோம். நீ இப்பொழுது பாடு.

ஆண்டாள்—நீங்கள், என்னை அன்போடு அதிகாரம் செய்வதுமாதிரி உங்கள் புருஷனிடமும் நடந்து கொண்டிருந்தால், 'முன்வினை'யெல்லாம் எங்கேயோ போயிருக்கும்.

கண்ணகி—புருஷவசியத்தைப் பற்றி இவ்வளவு தெரிந்து கொண்டிருக்கிற நீ, கலியாணம் செய்து பிறருக்கு வழிகாட்டாமல் போனாயே? அதெல்லாம் இருக்கட்டும்; நீ இப்பொழுது பாடு.

ஆண்டாள்—சரி!

என்புருகியின வேல் நெடுங்கண்கள் இமைபொருந்தா
பலநாளும்
துன்பக்கடல் புக்கு வைகுந்தன் என்பதோர் தோணி
பெறாது உழல்கின்றேன்.

அன்புடையாரைப் பிரிவுறு நோயது நீயும்
அறிதி குயிலே!
பொன்புரை மேனிக் கருளக் கொடியுடைப்
புண்ணியனே வரக்கூவாய்.

(கண்ணகி பெருமூச்சு விடுகிருள்)

ஆண்டாள்—ஏன் பெருமூச்சு விடுகின்றீர்கள்?

கண்ணகி—காதலின் கொடுமையை எவ்வளவு அழகாகவும், உண்மையாகவும் நீ வர்ணித்திருக்கிருய்? காதலுக்கு என்னென்ன கஷ்டங்கள்! எலும்பு உருகத் தான் செய்யும். இமை பொருந்தமாட்டா. கண்கள் உறங்கமாட்டா. தங்கை! அன்புடையாரைப் பிரிவது நோய் என்று சொல்லியிருக்கிருயே, அது முக்காலத்திலும் உண்மை. எக்காலத்திலும் பொய் போகாது. நான் கிழவி. நீ குமரி.

ஆண்டாள்—நீங்கள் கிழவியாவது? நன்ருகப் பேசினீர்கள்! நீங்கள் தவருக, கிழவியென்று சொல்லி விட்டீர்கள். வேருெரு சொல்லை உபயோகித்திருக்க வேண்டும்.

கண்ணகி—என்ன சொல்லை?

ஆண்டாள்—கவிதை என்ற சொல்லை.

கண்ணகி—நான் கவிதையா? நான் கிழவி அல்லவா?

ஆண்டாள்—நீங்களா கிழவி? உங்கள் வாழ்க்கை தமிழ் நாட்டின் அழியாக் கவிதை! கவிதைக்கு மூப்பு, சாக்காடு கிடையாது. எப்பொழுதும் இளமையோடிருப்பது கவிதை.

கண்ணகி—ஆகவே நான் உன்னைக் குமரி என்று சொன்னது உண்மைதானே?

(இருவரும் சிரிக்கிருர்கள்)

ஆண்டாள்—பழிக்குப் பழி வாங்கிவிட்டீர்கள்!

(சிரிக்கிருர்கள்)

கண்ணகி—தங்கை! உனக்கு ஆண்பிள்ளைகளின் பேரிலே, நம்பிக்கையே இல்லையா?

ஆண்டாள்—சிலரிடத்தில் உண்டு: மற்றவரிடம் இல்லை.

கண்ணகி—அந்த சிலர் யார்?

ஆண்டாள்—அரங்கமா நகருளான், என் தந்தை பெரியாழ்வார், தமிழ் நாட்டு மாபெரும் கவி பாரதி.

கண்ணகி—அவர்களுடைய பெருமையைச் சற்று சொல், கேட்போம்.

ஆண்டாள்—அரங்கநாதனுக்கு, மாலை தொடுத்தார் என் தந்தை. அதை என் கொண்டையில் வைத்து அழகு பார்த்துக்கொண்டேன். அவ்வாறு நான் செய்தது தமக்கு உவப்பு என்று சொல்லி, எனது உள்ளத்தைக் குளிரச் செய்தார் வடபெருங்கோயிலுடையான்.

கண்ணகி—உன் தந்தை யார்?

ஆண்டாள்—ஆண்மகன்கள், பொதுவாக அகம் பிடித்தவர்கள். ஆனல், என் தந்தையாரோ, பெண் இயற்கையையும் கலந்து கொண்டவர். அவர் தம்மை தாயாகவும், துவாரகாவாசி கண்ணனை மகனுகவும், பாவித்துக் கொண்டார்.

கண்ணகி—ஆமாம்.

ஆண்டாள்—என்ன அருமையான தாய் அன்பு!

எண்ணெய்க் குடத்தை உருட்டி இளம் பிள்ளை
 கிள்ளி எழுப்பி
கண்ணைப் புரட்டி விழித்து கழகண்டு
 செய்யும் பிரானே!
உண்ணக் கனிகள் தருவேன், ஒலிக்கடல்
 ஓதநீர் போலே
வண்ண அழகிய நம்பீ! மஞ்சனம் ஆட நீ வாராய்.
 என்ன அற்புதமான தன்மை!

கண்ணகி—என்ன அழகான பாட்டு? பாரதி?

ஆண்டாள்—உங்களுக்குத் தெரியாதா; என் வாயைக் கிண்டுகிறீர்களே?

கண்ணகி—உன் வாய் உண்மை நிறைந்த வாய்; உற்சாகம் பூரித்த வாய். உன் வாயைக் கிண்டினால் தான், சத்தியமும் சந்தோஷமும் கோஷித்துக் கொண்டு வெளிவரும்.

ஆண்டாள்—இந்த அழகான நிலவினில், எனக்கு கும்மி அடிக்க வேண்டும் என்று ஆசை உண்டாகின்றது. நீங்கள் கும்மி அடிக்க வருகிறீர்களா?

கண்ணகி—நீ இப்பொழுது இருக்கிற நிலையில் மாட்டேன் என்றால், நீ விட்டுவிடப் போகிறாயா? நாம் இருவர் மட்டும் போதுமா?

(சிரிக்கிறார்கள்)

ஆண்டாள்—போதும், பாரதி பெண் விடுதலை' யைப்பற்றி பாடிய கும்மிப் பாட்டு அற்புதமான பாட்டு.

கண்ணகி—கண்ணகிக் கிழவியும் ஆண்டாள் குமரியும் கும்மி அடித்த படலம் என்று தமிழ் நாட்டில் பேசிக்கொள்வார்கள்.

ஆண்டாள்—அப்படியே சொல்லிக் கொள்ளட்டும், கும்மி அடிப்போமா!

ஆண்டாள், கண்ணகி—

கும்மியடி தமிழ் நாடு முழுதும்
குலுங்க கைகொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோம் என்று கும்மியடி.

வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோமென்று கும்மியடி
சாதம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம்

காதலொருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கை கொடுத்து
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி

கற்புநிலை என்று சொல்ல வந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தை தள்ளி மிதித்திடுவோம்.

கண்ணகி—மீண்டும் ஒரு தடவை தமிழ் நாட்டில் பிறக்கலாமா?

ஆண்டாள்—அதுதான் என் ஆசை.

தெனாலிராமன்—காளமேகம்

ஒரு குரல்—பூலோகத்தில், இன்ப துன்பங்களுக்கு மத்தியில் வாழும் பொழுது, மனிதர்கள் துன்பமே இல்லாத இன்பத்தை வேண்டுகிறார்கள்; சொர்க்கத்தை வேண்டுகிறார்கள். சொர்க்கத்துக்கு வந்தால்தான், பூலோகத்தின் அருமை தெரியும். உணர்ச்சி வேலையில்லாத சொர்க்க வாழ்க்கை, யாருக்குமே பிடிக்காது.

இன்னொரு குரல்—(பாடிக்கொண்டு)

நாப் பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந்தேடி
நலமொன்று மறியாத நாரியரைக் கூடி
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவும் மாட்டீர்
கவர் பிளந்த மரத்துளையில் கால் நுழைத்துக்
கொண்டே
ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப்போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே

என்று பட்டினத்தார் பூலோகத்தைப் பற்றி மிகவும் கேவலமாக வர்ணித்திருக்கிறாரே, அந்த பூலோகத்தை காட்டிலும் இந்த சொர்க்கம் உயர்ந்ததா ? இல்லை.

வாதுக்குப் புலவர் இலை; வம்புக்குப் பேதையிலை
சாதல் இலை சிரிப்பில்லை சூதில்லை—அன்னியர்பால்
பொறாமை இலை, வேலை இல்லை வேடிக்கை பேச
ஆளுமிலை சொக்கமே ஸ்வாரஸ்ய மில்லையப்பா.

முதல் குரல்—யாரப்பா பாடிக் கொண்டு வருகிறது ?

மற்ற குரல்—யாரப்பா கேட்டுக் கொண்டு வருகிறது ?

முதல் குரல்—கேட்ட கேள்விக்கு பதில் சொல்வது மரியாதை.

மற்ற குரல்—பதில் சொல்லவேண்டும் என்ற சாக்கிலே, கண்ட கேள்வியைக் கேட்பது தகாது.

முதல் குரல்—நான் என்ன தவறுகக் கேள்விகேட்டு விட்டேன் ?

மற்ற குரல்—வழியிலேயோ வேறு எங்கேயோ ஒருவர் பாடிக் கொண்டிருந்தால், உனக்கென்ன ? அவர் விலாசத்தை நீ ஏன் விசாரிக்கிருய்? அப்படி விசாரிக்க, உனக்கு யார் அதிகாரம் கொடுத்தது ?

ஒரு குரல்—சபாஷ் ! உன்னைப்போல ஒரு ஆளைத் தான், அப்பா! நான் தேடிக் கொண்டிருக்கிறேன். சாமம் கூவுகிற சேவலைக் காட்டிலும் சண்டைச் சேவல் தான் உயர்ந்தது, அப்பா !

மற்ற குரல்—கவிக்கு முன்னே தைரியமாய்ப் பேசுவதற்கு, ஒரு விகடகவியால்தான் முடியும்.

ஒரு குரல்—நீங்கள் கவியா ?

மற்ற குரல்—நீங்கள் விகடகவியா ?

ஒரு குரல்—நானே தேடிக் கற்றுக்கொண்ட தொழில் அது அல்ல. ஒரு பாவி, "விகடக்கவியாகப் போகக் கடவது" என்று சபித்து விட்டான். நான் சுதந்திரமாக ஏற்றுக்கொண்ட தொழில் அல்ல.

மற்ற குரல்—சரிதான், நீயும் நம்மைச்சேர்ந்த பேர் வழிதான். நானும், வரத்தாலோ, சாபத்தாலோ, கவியானவன்.

ஒரு குரல்—நீ இன்னுர் என்று சொல்லமாட்டாயா ?

மற்ற குரல்—

இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம் என்றால் ஆயிரம் பாட்டாகாதா—சும்மா
இருந்தால் இருப்பேன் எழுந்தேனே யாயில்
பெருந்தாரை மேகம் பிள்ளாய் !

ஒரு குரல்—கவி காளமேகம் என்று அப்பொழுதே சொல்லித் தொலேக்கக் கூடாதா ?

மற்ற குரல்—இப்பொழுதாவது, நீ யார் என்று சொல்லித் தொலேக்கக் கூடாதா ?

ஒரு குரல்—உன்னைப் போலவே, காளியிடம் அகப் பட்டு அவஸ்தைப்பட்ட ஒருவன். தெனுலி ராமகிருஷ் ணன் !

காளமேகம்—(கட்டிக்கொண்டு) தெனுலிராமனு? தெனுலிராமன் என்று சொல்லுவதுதான் அழகாயிருக் கிறது. ராமகிருஷ்ணன், வேண்டாமப்பா !

தெனுலிராமன்—நல்லது அப்பா ! எனக்கு சொர்க்கம் பிடிக்கவே இல்லே ! ஊசி மிளகாய் சங்கதி. ஒன்றுமே இங்கே இல்லேயே '

காளமேகம்—பூலோகத்துக்கு ஈடாகாது சொர்க் கம்.

தெனுலிராமன்—நன்ருய்ச் சொன்னுய்! சொன்ன உன் வாய்க்கு ராயர் சொன்ன சீமை மண், ஒரு வண்டி போடணும் !

காளமேகம்—காளமேகம் அப்பர், காளமேகம் ! ஒரு வண்டிச் சர்க்கரையை ஒரு நிமிஷத்தில் கரைத்து விடும். காளி கோயிலிலே அன்றைக்கு அகப்பட்டுக் கொண்டாயே, அங்கே என்ன நடந்தது ?

தெனுலிராமன்—ஆயிரம் தலேயும், இரண்டு கையு மாக, பிரம்மாண்டமான பெண் உருவம் என்முன்னே வந்து நின்றது. அதைப் பார்த்ததும் எனக்கு பயமோ அருவருப்போ உண்டாகவில்லே. படீர் என்ன சிரிப்பு வந்தது. எல்லோரும் கண்டு கிலி பிடித்துத் தொடை நடுங்கும் காளிக்கு என் சிரிப்பு பிடிக்குமா ?

காளமேகம்—வாஸ்தவம்தான் ! ஆயிர முகத்துக்கு இரண்டு கை என்ருல் யாருக்குத்தான் சிரிப்பு வராது?

தெனுலிராமன்-உருவத்தைக் கண்டு எனக்குசிரிப்பு வரவில்லே. ஆயிரம் மூக்குகளிலும் ஏககாலத்தில் ஜல தோஷம் பிடித்துக் கொண்டால், இரண்டு கையாலே மட்டும் எப்படி சிந்துகிறது என்று சந்தேகம் வந்து சிரித்துவிட்டேன். காளிக்கு கோபம் வந்து விட்டது.

காளமேகம்—சந்தேகச் சிரிப்பு நீ சிரித்தாய்: அதை அவள் அகம்பாவம் என்று எண்ணிக்கொண்டாள்.

தெனுலிராமன்-பெரிய இடங்களில் எல்லாம், இந்த அவஸ்தையை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் அபத்தமாக நடந்துகொள்ளுவதை யெல்லாம் பார்த்து, நாம் சும்மாயிருக்கவேண்டுமாம் !

காளமேகம்—இலக்கணப் புலவர்களுக்கு, நல்ல கவிதையைக் கண்டால் பிடிக்காது. வெள்ளத்துக்காக கரையா ? அல்லது கரையைக் கருதி, வெள்ளம் பெருக்கு எடுக்கிறதா ? சின்ன மனிதர்கள் எல்லாம் தங்களைப் பெரியவர்களாக மதித்துக் கொண்டால், அவர்களுக்கு பிறர் நகைப்பது பிடிக்காது.

தெனுலிராமன் நன்ருக சொன்னுய்! காளி விஷயத்தில் அந்த மாதிரி சொல்லப்படாது என்ருலும், பொதுவாக, நீ சொன்னது உண்மையே.

காளமேகம்—அது என்னமோ, காளிசெய்தது எனக்குப் பிடிக்க வில்லை. எனது காதலி மோகனுங்கியின் காதல் கவிதையைக் காட்டிலும், நான் பாடிய சொல் கவிதை உயர்ந்ததாகத் தோன்றவில்லை. மோகனுங்கியின் காதல் கவிதையில் நான் மிதந்து கிடந்தேன். அந்த இன்பத்தை உண்மையான இன்பம் என்று கருதுகிறேன். சொல் கவிதையால், இலக்கணப் புலவர்களோடும், கவிதா பாவத்தைச் சிறிதும் உணராமல் கவிகட்டும் கொத்தன்மார்களோடும் மல்போர் தொடுப்பதில் என்ன இன்பம் இருக்கிறது ?

தெனுலிராமன்—பொருள்களின் நுட்பத்தை அறியாமல் கிளிப்பிள்ளைகளைப்போல வாதம் செய்பவர்கள், சட்ட சட்டம் என்று மார்தட்டிக் கொள்ளுவார்கள்.

காளமேகம்—சட்டம் என்று சொல்லி, வாழ்க்கையைச் சப்பட்டையாகச் செய்ய முயலும் நிபுணர்களைக் கண்டால் நெஞ்சுபொறுக்குதில்லையே !

தெனுலிராமன்—காளியின் விசித்திரச் செயலைக் கேள். அவளுக்கு கோபம் வந்ததற்காக, நான் விகட

கவியாக ஆகவேண்டுமாம்! அதுவும் ராஜசபையிலே விகடகவியாம்!

காளமேகம்—என் விஷயத்தில் மட்டும், அவளுக்கு கருணையா, என்ன? தவங்கிடந்த யாரோ ஒரு அசடன் செய்த தவறுக்காக, மோகனுங்கியின் இன்பக் காதலை நுகர்ந்து வந்த நான், கவி காளமேகம் ஆகவேண்டு மாம்! காளிக்குச் சக்தி யிருப்பதை அவள் கொடுமை யாக இப்படி உபயோகப் படுத்தலாமோ?

தெனாலிராமன்—அதைத்தான் அப்பா,- நானும் சொல்லுகிறேன். மோகனுங்கியோடு பூலோகத்தில் இருப்பது எவ்வளவு இன்ப மயமானது என்று நீ அடிக்கடி எண்ணுவதுபோல, அந்த கம்பீர சனி பிடித்து ஆட்டிவைத்த ராயர் சமஸ்தானத்திலேயே இருக்க வேண்டும் என்று எனக்கு எத்தனையோ தடவைகள் தோன்றியிருக்கின்றன.

காளமேகம்—பூ லோ க த் தி ல் இருக்கிறவர்கள் சொர்க்கம் சொர்க்கம் என்று அடித்துக்கொள்ளுகிறார் களே, அவர்களுக்கு சொர்க்கத்தின் உண்மையான தன்மை தெரிவதில்லை. இங்கே இனிப்பான காதல் கிடையாது அப்பா! காரம் சேராத ஆகாரம் எப்படி இருக்கும்? பல வர்ணங்கள் இருந்தால், கண் பூத்துப் போகாது. ஒரே நிறத்தை எந்த நேரமும் பார்க்கிறது என்றால், அலுத்துப் போகாதா?

தெனாலிராமன்—சொர்க்கத்திலே எதைக் கண்டு சிரிக்கிறது? யாரைப் பார்த்து சிரிக்கிறது? யாரோடு சேர்ந்து சிரிக்கிறது? சிரித்தால், எதற்காக சிரிக்கிறாய் என்று கேட்பார்கள் போலிருக்கிறது. சிரிக்கிறதற்கு பள்ளிக்கூடம் போடவேணும், அப்பா, சொர்க்கத் திலே!

காளமேகம்—சிரிக்க வேண்டியது தான். நகைச் சுவை இல்லாதவன் மகா பாபி. அதிலே, எனக்கும், உனக்கும் அபிப்பிராயப்பேதம் கிடையாது.

தெனாலிராமன்—பின்னே எதிலே அபிப்பிராய பேதம்?

காளமேகம்—நீ தலைமறைவாக இருக்கவேண்டும் என்று கோபத்தால், உன் பேரில், ராயர் உத்திரவு போட்டாரே, அப்பொழுது நீ என்ன செய்தாய்?

தெனாலிராமன்—தலையிலே சட்டியைக் கவிழ்த்துக் கொண்டு ராயர் முன்னே போய் நின்றேன்.

காளமேகம்—நீ செய்த வேலைதான் முதல்தரமான நகைச் சுவை வேலை. கோபம் கொண்ட ராயரும் விழுந்து விழுந்து சிரித்தாரல்லவா? தான் அவமானம் அடைந்ததாக எண்ணிக் கொள்ளவில்லை.

தெனாலிராமன்—ஆமாம்! அபத்தமான சொல்லுக்கும் செயலுக்கும் சிரிப்புத் தான் மாற்று. யோசனையில்லாமல் செய்கிற காரியத்துக்கும் சிரிப்புத்தான் மாற்று.

காளமேகம்—நான் திருமலைராயன் பட்டினத்துக்குப் போயிருந்த பொழுது, அதிமதுர கவி உள்ளிட்ட புலவர்கள் என்னைப் பார்த்துச் சிரித்தார்களே, அது நகைச்சுவையாகுமா? அது ஏளனமல்லவா?

தெனாலிராமன்—ஏளனம் செய்வதையும் அவமானப் படுத்துவதையும் பெரும்பாலோர் ஹாஸ்யம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காளமேகம்—உண்மைக்கும் நகைச் சுவைக்கும் சம்பந்தமே தேவையில்லை என்பதைப் போல பலர் பேசுகிறார்கள். நகைச் சுவைக்கு பொய் பீடமாயிருக்க முடியுமா? முடியாது.

தெனாலிராமன்—வாஸ்தவம். உண்மையை விளக்கிக் காண்பிபதற்குத்தான் நகைச்சுவை உபயோகமாக வேண்டும். அதை மறைப்பதற்கல்ல. கலையின் அழகை வெளிப்படுத்துவதற்குத்தான் ஹாஸ்ய ரஸத்தை உபயோகப்படுத்த வேண்டும். கலையின் அழகை அழிப்பதற்காக அல்ல.

காளமேகம்—ஒரு பொருளின் உண்மையான தன்மையைக் கண்டறிந்தவன்தான் இயற்கையான நகைச்சுவையைக் கையாள முடியும் பரிவும் பக்குவமும்

இல்லாதவர்களின் கையில் அகப்பட்டுத் தவிப்பது நகைச்சுவை அல்ல. அதற்கு பெயர் ஏளன ஆசை என்று சொல்லலாம்.

தெனுலிராமன் — இன்றைக்குத்தான், அப்பா, எனக்கு, சொர்க்கம் கொஞ்சம் கலகலப்பாயிருக்கிறது, சொர்க்கம் சுவராஸ்யம் இல்லே யென்று பாடினயே. அதை மறுபடியும் பாடு.

காளமேகம்—வாதுக்குப் புலவர் இலே, வம்புக்குப் பேதையிலே, சாதல் இலே சிரிப்பில்லே, சூதில்லே-அன்னியர் பால் பொருமை இலே, வேலே இல்லே, வேடிக்கை பேச ஆளுமில்லே, சொர்க்கமே ஸ்வாரஸ்யமில்லே யப்பா.

தெனுலிராமன்.—சரியான அனுபவம் அப்பா!

கம்பன்–பாரதி

பாரதி—அரசனை அண்டிப் பிழைப்பவன் சேவகன்; அவனை அகமகிழ்வித்து ஆட்டி வதைப்பவன் விகடகவி; அரசனை ஆண்மகனாகச் செய்து அணுவும் கோணாமல், அரசியல் நடத்தத் தூண்டுபவன் கவி. அவைக்கும் அரசனுக்கும் அஞ்சாத கவிஞன்தான் கவிஞன். மற்ற கவிஞர்கள் யாவரும் சேவகர்கள்தான். கம்பநாடர் மகா உயர்ந்த கவிஞன். அகம்பாவத்தை மடக்கி, அநீதியை எடுத்துரைத்து, அடக்கத்துடனும் அன்புடனும் வாழ்ந்த மிக உத்தமமான மனிதன். கம்பநாடரன்றி வேறு யார் இதை எழுதியிருக்க முடியும்?

''அரக்கர் ஓர் அழிவு செய்து கழிவரேல், அதற்கு
வேறோர்,
அரக்கினத் தரசைக் கொல்ல மனு நெறி கூறிற்
றுண்டோ,
இரக்கம் எங்குகுத்தாய் என்பால் எப்பிழை
கண்டா யப்பா,
பரங்கழி இது நீ பூண்டால் புகழை யார்
பறிக்கல் பாலார்.''

கம்பநாடரே! உமது மாண்பே மாண்பு! இசைமிகு சொற்களால், சித்திரச் சிறப்புடன், எக்காலத்திலும் அழியாத ராமாயண இதிகாசத்தை எழுதிய தபஸ்வி வால்மீகிகூட சற்று நழுவ விட்ட இடத்தில், கம்பநாடர் எட்டு திக்குகளையும் முட்டும்படியாக வாலியை ராமனிடம் சம்வாதம் செய்யும்படி செய்தாரே! ஆமாம்! அநியாயத்தைக் கண்டு மனம் பொங்காதவன் கவிஞனாயிருக்க முடியாது. மனிதனாகவும் வாழமுடி

யாது. கம்பநாடரைப் பெற்றெடுத்த தமிழ் நாட்டை நான் வணங்குகிறேன்.

அம்பிகாபதி—

காதல், காதல், காதல்
காதல் போயின் காதல் போயின்,
சாதல், சாதல், சாதல்.
இன்பம், இன்பம், இன்பம்
இன்பத்திற்கோர் எல்லை காணில்,
துன்பம், துன்பம், துன்பம்.
நாதம், நாதம், நாதம்
நாதத்தே ஓர் நலிவுண்டாயின்,
சேதம், சேதம், சேதம்.

உண்மை. இவ்வாறு பாடக்கூடியவர் ஒருவர்தான். அவர்தான் பாரதி.

பாரதி—யாரப்பா, இங்கே, பாரதியைப் பற்றி பேசுகிறது?

அம்பிகாபதி—தாங்கள் யாரோ?

பாரதி—நான் பாரதி.

அம்பிகாபதி.—வணக்கம், வணக்கம், வணக்கம். நான் அம்பிகாபதி.

பாரதி—கம்பநாடரின் அற்புதச் செல்வன் அம்பிகாபதியா?

அம்பிகாபதி—அவனே!

பாரதி—தம்பி உமக்குத்தான் காதலின் பெருமை தெரியும். காதலுக்குக் கலங்கரை விளக்கு நீர்தானே? கம்பநாடரை எங்கே காணலாம்?

அம்பிகாபதி—அதைச் சொல்லத்தான் வாயெடுத்தேன் கொஞ்ச தூரத்துக்கப்பால் இருக்கிறார். தங்களைப் பற்றித்தான் எங்களுக்குள் எப்பொழுதும் பேச்சு.

பாரதி—அப்படியா?

அம்பிகாபதி—ஆமாம்!

பாரதி—கம்பநாடரைப் பார்க்க வேண்டுமே. இப்பொழுதே பார்க்கவேண்டுமே!

அம்பிகாபதி—இப்படியே, சற்று போய்க் கொண்டிருக்கலாமா?

பாரதி—நல்லது!

அம்பிகாபதி—அனேகமாக, அப்பா அவர்கள் இருக்குமிடம்.........

பாரதி—யாரோ பாடுகிற குரல் கேட்கிறதே!

அம்பிகாபதி—அவர்கள்தான் எங்கள் தகப்பனார். தங்கள் கம்பநாடர்.

பாரதி—சற்று இங்கேயே தாமதிப்போம். என்ன பாடுகிறார் என்று கேட்போம். ஒருவர் பாடுவது மன லயத்துக்கும் மகிழ்ச்சிக்காகவும்தான். அந்த சமயத்தில் அவரைக் கிட்ட அணுகித் தொந்திரை செய்வது அழகல்ல.

கம்பன்—பாட்டுக்கலந்திடவே-அங்கே ஒரு
பத்தினிப்பெண் வேணும்-எங்கள் கூட்டுக்களி
யினிலே-கவிதைகள்
கொண்டு தரவேணும்-அந்தக் காட்டு
வெளியினிலே-அம்மா, நின்றன்
காவலுற வேணும்-என்றன் பாட்டுத் திறத்
—இவ்வையத்தைப் [தாலே
பாலித்திட வேணும்.....................
—என்றன் பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்
பாலித்திட வேணும். [தைப்

அம்பிகாபதி—(மெல்லிய குரலுடன்) — தங்கள் 'காணி நிலம் வேண்டும்' பாட்டுத்தான்.

கம்பன்—(அருகில் வருபவர்களைக்கூட கவனிக்காமல்)—பாட்டுத் திறத்தாலே, இவ்வையத்தைப் பாலித்திட வேணும். பாரதி! நீர்தான் உண்மையான கவி. புவிக்கு அரசன் கவிதான் என்று அழுத்தமாகச் சொல்லக் கூடியவர் நீர்தான். ஒவ்வொருவருக்கும் காணி நிலம் வேண்டும் என்றும் தனி ஒருவனுக்கு உண

வில்லை எனின், ஜகத்தினை அழித்திடுவோம் என்றும் அகலாத அன்புடனும் அஞ்சாத நெஞ்சத்தோடும் சொல்லக்கூடியவர் நீர் ஒருவர்தான். நீர் சொல்லுவது உண்மைதானே? கவி, புவியரசனுனதால், அதைக் காத்துப் பாலிக்கும் தொழில், அவனதுதானே?

அம்பிகாபதி—அப்பா!

கம்பன்—அம்பிகாபதி! உனது அரசிளங்குமரியை கண்டு பேசியாகி விட்டதா?

அம்பிகாபதி—மூன்றாவது மனிதர் இருப்பதைக் கூட பார்க்காமல், தாங்கள்........................

கம்பன்—இவர்கள் யார்?

அம்பிகாபதி—தாங்கள், தங்களுக்குள்ளாகவே, சற்று முன் பேசிக்கொண்டிருந்த புவிக்கரசனுன கவி பாரதி அவர்கள்.

கம்பன்—அடடா! வரணும், வரணும், வரணும்! என்ன பாக்கியம்? என்ன பாக்கியம்! அம்பிகாபதி! ஒட்டுக்கேட்பது தவறு, அப்பா! அப்படிக் கேட்டாலும், அதைப் பகிரங்கப்படுத்துவது இன்னும் பெரிய தவறு!

பாரதி—அது அவரது சொந்த தவறல்ல. அதிலே அவருடைய பங்கு மிகக் குறைவு. நீங்கள் பாடும் பொழுது உங்களை தொந்திரவு செய்யப்படாது என்று நான்தான் சொன்னது.

கம்பன் (சிரித்துக்கொண்டு)—நான் பாடினதை நீங்களும் கேட்டீர்களா?

பாரதி—பாட்டா உயர்ந்தது? பாவம் தானே?

கம்பன்—உங்கள் பாட்டைத்தான் நான் பாடிக்கொண்டிருந்தேன் என்று உங்களுக்குத் தெரியும். ஆகவே பாட்டைப்பற்றி அபிப்ராயம் சொல்ல உங்களுக்குப் பாத்தியம் கிடையாது. பாடின பாவத்தைப் பற்றி சொன்னீர்களே, அது மிகவும் சரி கவி, அரசனைக் காட்டிலும் உயர்ந்தவன் என்பதுதான் உண்மை.

பாரதி—எல்லாம் நீங்கள் காண்பித்த வழி தானே?

கம்பன்—உண்மை! நான் என் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது. இதோ, இருக்கிருனே, அம்பிகாபதி, இவனைக் காப்பாற்ற முடியவில்லையே!

அப்பா! அதற்காக இப்பொழுது மனக்கலக்கம் எதற்கு?

பாரதி—அகம்படைத்த அரசன் ஆக்கினையைக் காட்டிலும் கவிதை உயர்ந்தது அதைக் காட்டிலும் காதல் உயர்ந்தது என்று சுட்டிக்காட்டி பட்டு வீழ்ந்த அம்பிகாபதி, காதல் கவிதைக்கு அருமையான விளக்கமாவர். நீங்கள் அம்பிகாபதியைக் காப்பாற்ற முடியாமைக்கு நான் வருந்தவில்லை. காதலின் மாண்பை உணர்ந்து அம்பிகாபதி தினம் என்று ஒரு நாளைக் குறிப்பிட்டு தமிழ் நாடு கொண்டாடவில்லையே என்றுதான் வருந்துகிறேன்.

அம்பிகாபதி...பெரியவர்கள் இருவர் கூடிளுல்,அது சிறியனுன எனக்கா சித்திரவதையாக முடியவேண்டும்?

கம்பன்—பாரதி சொன்னது உண்மை. காதலுக்காக் கலியாணமா? அல்லது கலியாணத்துக்காக கலியாணமா? அரசன் மகளை அனுதையொருவன் மணக்கலாகாதா? அன்றைக்கு நான் இதைக் கவனிக்கவில்லை. ரகசியமாக அரசிளங்குமரியைச் சந்தித்தாய், அதுவும் என்னுலே என்று அரசன் சொன்னதாலே, நான் மௌனம் சாதிக்கவேண்டியதாயிற்று. என் ஸ்தானத்தில், அப்பொழுது பாரதி இருந்திருந்தால், உன் வழக்கு தோற்றுப் போக, அவர் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்.

பாரதி—எப்படியிருக்குமோ. யார் கண்டார்? தாங்கள் நன்ருகச் சொன்னீர்கள். அரசன் மகளை அனுதை கட்டலாம் என்று கட்டாயம் சொல்லியிருப்பேன். அதற்கான வெகுமதியையும் பெற்றுக்கொண்டிருப்பேன்.

கம்பன்—அதைத் தான் நான் சொன்னேன். தக்க தருணத்தில் ஒரு உண்மையை வற்புறுத்திப் பிரசாரம் செய்யத் தவறிவிட்டால், அது இறுதியில் உலகத்துக்குப் பெரிய நஷ்டமாக முடிந்துவிடுகிறது. காலத்தால்

செய்த உதவியை வள்ளுவனார் பாராட்டுகிறார். அஞ்சாமல் உண்மையை எடுத்துக் கூறுவதுதான், கவிஞன் உலகத்துக்கு காலத்தால் செய்யக்கூடிய உதவியாகும். அதை செய்யத் தவறினால், அவன் கவிஞன் அல்ல; அவன் கசடன்.

பாரதி—உண்மையான கவிஞன் அவன்தான். மற்றவர்கள், அச்சதேவதைக்குப் பணிவிடைசெய்து கட்டியம் கூறுபவர்கள். வயிற்றைப் பெரிதாக மதிப்பவன், வாணியின் தொண்டன் அல்லன்.

அம்பிகாபதி—தாங்கள் ஓரிடத்தில் சொல்லியிருப்பது போல, அவன் காசுக்குத் தொண்டன், சோற்றுக்குத் தொண்டன்.

பாரதி—அம்பிகாபதி ! உம்மைப்போல, எனக்குத் தமிழ் நாட்டில் அப்பொழுது, ஒரு தோழன்...

அம்பிகாபதி—தொண்டன் என்று சொல்லுங்கள்.

கம்பன்—அவன் சொல்வது பொருத்தம் என்று தோன்றுகிறது !

பாரதி—தொண்டனாயிருப்பவன் தோழனாயிருக்காமல் முடியாது. தொண்டும் தோழமையும் ஒன்று என்று தங்களுக்குத் தெரியாதா ? சோழமன்னன் தோழமை முறையிலே தானே தங்களுக்கு அடப்பைத் தொண்டு செய்தது ?

கம்பன்—ஆமாம் ! நெடுநாளாகி விட்டதால், சில விஷயங்கள் மங்கி, மறந்துபோய் விடுகின்றன.

பாரதி—உங்களுக்கு மறதி இல்லை. கவனம் வேறு எங்கேயோ இருக்கிறது.

கம்பன்—பாரதி! நீர், குறிப்புக்குப் பின் இருக்கும் அடிக் குறிப்பில் கண் செலுத்தித் துளைத்துப் பார்ப்பவர். என் கவனம் வேறு இடத்தில் இருந்தது என்பது உண்மை.

அம்பிகாபதி—நாம் வரும்பொழுது பாடிக் கொண்டிருந்தார்களே, பாட்டுத் திறத்தாலே, வையத்தைப் பாலித்திடவேணும் என்று, அதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

பாரதி—அப்படியா ?

கம்பன்—ஆமாம் !

பாரதி—அம்பிகாபதி இளம் பிராயத்தில் மறைந்த தற்கு, இப்பொழுது எனக்கு காரணம் தெரிகிறது !

கம்பன்—என்ன ?

பாரதி—அவருடைய மிகக் கூர்மையான பார்வை தான் காரணம் !

அம்பிகாபதி—அரசிளங்குமரியைப் பார்த்த பார்வையா ?

(சிரிக்கிறார்கள்)

பாரதி—இல்லை ! மனிதர்களின் மனத்துக்கு நாற்புறங்களிலும் தொங்கும் திரையைத் தூக்கி, உட்புகுந்து, அவர்களின் ஜீவநாடியை பார்க்க முயன்றது தான் !

கம்பன்—அவன் அந்தப்புறத் திரைக்குள் நுழைந்தது உண்மையே !

பாரதி—நான் சிலேடையாகப் பேசவில்லை. பிறர் மனத்தில் இருப்பதை எளிதிலேயே அறிந்து, அதை வெளியே சொல்லுபவன், வெகு சீக்கிரத்தில் ஜனத் தலைவனாகிறான். அல்லது வெகு ஜன விரோதி ஆகிறான். பலசாலிகளுக்கு உண்மையைச் சொன்னால், அவர்கள் பக்தர்களாகிறார்கள். பலவீனர்களுக்கு உண்மையைச் சொன்னால், அவர்கள், தங்கள் கோழைத் தனத்தால் அவனுக்கு பகைவனாக மாறிவிடுகிறார்கள்.

அம்பிகாபதி—ஆழத் தோண்டிக் கண்டெடுத்த உண்மை !

கம்பன்—பாரதி ! அம்பிகாபதியை நீங்கள் சீடனாக பாவித்துக் கொள்ளலாம். நீங்கள் இல்லாத சமயத்தில் அவன் உங்களைப்பற்றி பேசியதை வண்டிக் கணக்கில் ஏற்றிப் பார்க்கலாம்.

அம்பிகாபதி—'காதல் காதல் காதல், காதல் போயின், காதல் போயின், சாதல், சாதல், சாதல்' என்று காதலின் கொடுமையையும் இயற்கைத் தேவையையும் வேறு யார் கடுகைத் துளைத்த குறளைப்போல் பாடினர் ?

கம்பன்—பார்த்தீர்களா ? அவன் தன்னுடை பழைய மூட்டையை மீண்டும் அவிழ்க்கப் பார்க்கிறுன்.

பாரதி—உங்களுக்கு நான் ஞாபகப்படுத்தவேண்டியது ஒன்றுமில்லை. காதல் என்பது அம்பிகாபதியின் பழைய மூட்டை அல்ல. காதல், மனித வர்க்கத்தின் உற்பத்தி விதை. அதுவே அதை மாய்க்கும் போர்க்களம்.

அம்பிகாபதி — அதைத்தான் தாங்கள் தங்கள் 'ஊழிக்கூத்தில்' நன்ருக விளக்கிக் காண்பித்திருக்கிறீர்களே ? நான் தங்களை ஒன்று வேண்டிக் கொள்ளலாமா ?

பாரதி—நல்லது !

கம்பன்—ஊழிக்கூத்தை நீங்கள் பாடிக்காண்பிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளப் போகிறுன். அதுதானே அம்பிகாபதி?

அம்பிகாபதி—எல்லாப் பாட்டுகளையும் அல்ல. கடைசிப் பாட்டை மட்டும்.

பாரதி—நல்லது ! இதோ பாடுகிறேன்.

காலத்தொடு நிர்மூலம் படு மூவுலகும்—அங்கே
கடவுள் மோனத் தொளியே தனியா யிலகும்
—சிவன்.
கோலம் கண்டு உன் கனல் செய்சினமும் விலகும்
—கையைக்.
கொஞ்சித் தொடுவாய், ஆனந்தக் கூத்திடுவாய்
அன்னை, அன்னை,
ஆடுங்கூத்தை நாடச் செய்தாய் என்னை.

அம்பிகாபதி—அற்புதமான உண்மை!

காதல், காதல், காதல்

காதல் போயின் காதல் போயின்

சாதல், சாதல், சாதல்

கம்பன்—அம்பிகாபதி! காதல் சூரன் கர்ம வீரனாக ஆக முடியாது. அவன் காதல் அமுதத்துக்கு ஏங்கி நிற்பானே தவிர, கர்மத்தின் வீர்யத்தை நாடமாட்டான்.

அம்பிகாபதி—அதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். கர்மத்துக்கு விதையும் காதல்தானே? காதல் கொண்டவன் சோம்பிக் கிடக்கவே முடியாது. படைப்பின் சலனத்துக்கே மூலகாரணமாக விளங்குவது காதல்.

கம்பன்—இந்த காதல் பித்தனுக்கு, என்ன செய்யலாம்?

பாரதி—காதல் நாள் என்று அம்பிகாபதி உயிர் நீத்த நாளைத் தமிழ் நாடு கொண்டாடினால்தான், அம்பிகாபதியின் பித்தம் தெளியும்!

கம்பன்—அம்பிகாபதி! அது உண்மையா?

அம்பிகாபதி—அதை நான்......

கம்பன்—சொல், விழுங்காதே.

அம்பிகாபதி—ஆட்சேபிக்கவில்லை. இருந்தாலும், அரசிளங்குமரியைக் கேட்டுச் சொல்லுகிறேன்..

பாரதி—சரியான பதில்.

மாதவி—தமயந்தி

இன்பம் என்பதே பொய். அதுவும், உடல் இன்பம் என்பது வடிகட்டின பொய். இந்தப் பொய்க்காக, பூலோகத்தில் மாந்தர்கள், அனவரதமும் முயன்று முயன்று, மனக்கிலேச மடைகின்றூர்கள். முயலுவதோ, இன்பத்துக்காக, அடைவதோ, துன்பம். இது வெள்ளிடை மலே. இவ்வாருயினும், பூலோகத்தில், இந்தத் துறையில் முயற்சி குன்றுவதில்லே.

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத் துணையாவது.

இது எவ்வளவு உண்மை என்று மாதவி—தமயந்தி சம்பாஷணையினின்றும் நீங்கள் தெரிந்துகொள்ளுவீர்கள்.

மாதவி:—பிறத்தலும் மூத்தலும் பிணிப்
பட்டிரங்கலும்
இறத்தலும் உடையது இடும்பை கொள்கலம்
மக்கள் யாக்கை யிதுவென உணர்ந்து மிக்க
நல்லறம் விரும்புதல் புரிந்தேன் ஆகையால்,
மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கு அறம் முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய இறந்தோய் நின்னடி
கண் பிறர்க்கு அளிக்கும் கண்ணேய் நின்னடி
தீ மொழிக்கு அடைத்த செவியோய் நின்னடி

வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர் கெட நடப்போய் நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்னடி
வணங்குதல் அல்லது வாழ்த்தல் என்னுவிற்கு
அடங்காது

என்று புத்த பெருமானின் திருவடிகளில் சரணமடைவதே பொருத்தமாகும்.

இளமையும் எழிலும் எவ்வளவு காலத்துக்கு ?
ஆசையும் பாசமும் எவ்வளவு காலத்துக்கு ?
காலத் தச்சன் வெட்டி முறிக்கும் மரங்கள் இவை!
தீக்குணங்கள் என்ற புயல் காற்றில் அகப்பட்டுக்
கொண்டால், இந்த மரங்களின் சிறுகிளைகளைக்கூட
கண்ணில் காணுதல் முடியாது.

தமயந்தி—ஏன் அம்மா, இப்படி மனக் குறையாகப் பேசிக்கணும் ? பூலோகத்தில் இன்பம் இல்லையென்று சொல்லுகிறீர்கள் ? பூலோகத்தில் இல்லாத இன்பங்களை, வேறு எந்த லோகத்திலும் காணமுடியாது.

இன்னடிசில் புக்களைந்து தாமரைக் கை பூ நாறும்
செய்யவாய் மக்களைப் பெறுவது

இன்பம் அல்ல என்று எந்த ஸ்திரீயும் சொல்லத் துணிய மாட்டாள். எனக்கும் சிறிதளவு பூலோகத்தின் அனுபவம் உண்டு. நானும் சொல்லரிய துன்பங்களை அனுபவித்திருக்கிறேன். கெட்டபெயரும் அடைந்திருக்கிறேன்......

மாதவி—என்னைக் காட்டிலும் யாரும் பூலோகத்தில் கெட்டப் பெயர் வாங்கியிருக்க முடியாது. செடியும் கொடியும் காயும் பூவுமாக செழித்து நிற்கவேண்டிய குடும்பத்தில் புகுந்து, நாசமாக்கிய பாபி என்று நான் பெயர் எடுத்ததைக் காட்டிலும் வேறு யார் அவ்வளவு கெட்ட பெயர் எடுத்திருக்க முடியும் ?

தமயந்தி—கெட்ட பெயர் எடுத்ததற்காக மனக் கசப்பு உண்டாக வேண்டுமென்பதுண்டா ? வறட்சி

காலத்தில் விளைகிற நிலம்தான் உயர்ந்தது. மனக் கிலேசம் வரும் சமயத்தில், மனங்கலங்காமல் இருப்பது தான் மனிதத்தன்மை. பூலோகத்தை இகழ்வதும் அங்கே இன்பம் இல்லை என்று சொல்லுவதும் அவ்வளவு பொருத்தமானதாக எனக்குத் தோன்றவில்லை.

மாதவி—நான் யார் என்று உங்களுக்கு தெரிந்திருந்தால், நீங்கள் நான் சொல்லுவதை, அவசரப்பட்டுத் தள்ளிவிட மாட்டீர்கள்.

தமயந்தி—தங்கள் தங்கள் துக்கத்தையும் தங்கள் தங்கள் அனுபவத்தையுமே சிறப்பாகச் சொல்லுவது பூலோகத்தில் ஒரு சம்பிரதாயம். அதையொட்டி நீங்கள், இங்கேயும் சொல்லுகிறீர்கள் போலிருக்கிறது!

மாதவி—மன்னித்து விடுங்கள். நீங்கள் யார் என்றும் உங்கள் அனுபவம் இன்னதென்றும் சொல்லுங்கள், கேட்கிறேன்.

தமயந்தி—ஒருவருடைய அனுபவத்தைத் தெரிந்து கொள்ளுவதற்கு, அவருடைய பெயர். ஊர், சரிதம், இவைகள் தெரிய வேண்டுவது அவசியமென எனக்குத் தோன்றவில்லை.

மாதவி—நீங்கள் சொல்லுவது பேர்பாதி உண்மை தான். பாலுக்கு சர்க்கரை இல்லாமையும் கூழுக்கு உப்பு இல்லாமையும் ஒரே அனுபவத்தைத்தான் கொடுக்கும் என்று பூலோகத்தில் சொல்லிக் கொள்ளுவதை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது,

தமயந்தி-நீங்கள் சொல்லுவது ஒருவாறு உண்மை என்றே வைத்துக் கொள்ளுவோம். என் அனுபவத்தைச் சொல்லுவதற்கு, நான் யார் என்று நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்கு அவசியம் எனக்குத் தெரியவில்லை.

மாதவி—அவசியம் என்றே எனக்குத் தோன்றுகிறது. எளியவன் என்று எனக்குத் தெரிந்தால் அவன் கூழுக்கு உப்பு இல்லாமல் கூட சாப்பிட்டு விடுவான் என்று என்னால் துணிந்து சொல்லமுடியும். தனவந்தன்

என்றால் அவன், சர்க்கரை யில்லாமல் பாலை குடிப்பதற்குத் தவித்துப் போவான் என்றும் நிச்சயமாக என்னால் சொல்ல முடியும்.

தமயந்தி-நீங்கள் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளுகிறேன். அதற்காக, ஊர், பெயர் தெரியவேண்டுமென்பதுண்டா ?

மாதவி—விளையாட்டாக, வாதம் நீளமாக வளர்ந்து விட்டது. நீங்கள் யார் என்று சொல்லவேண்டாம். நான் யார் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

தமயந்தி—நான் கேட்டுக் கொண்டால் தானே ?

மாதவி—நீங்கள் கேட்டுக் கொள்ளத் தேவையில்லை; காது கொடுத்துக் கேட்டால் போதும்.

தமயந்தி—அவ்வளவு மரியாதைகூடக் காண்பிக்காவிடில்...

மாதவி—நான் மாதவி, காவிரிப்பூம்பட்டின மாதவி. விலை மாதர் இல்லத்தில் பிறந்த துர்ப்பாக்கியவதியான மாதவி.

தமயந்தி—நீங்கள்தானா ? உங்கள் கதையைக் கேட்டு, நான் பிரமித்துப் போயிருக்கிறேன்.

மாதவி—ஏன் பிரமித்துப் போகவேண்டும் ?

தமயந்தி—காதல் என்ற தீயை வைத்து பிரமன் ஸ்திரீ ஜன்மத்தைச் சாம்பலாக்கி விட்டான். அந்த ஸ்திரீ ஜன்மத்தை இன்னும் கேவலமாக, பல வழிகளில் மனிதர்கள் பாழாக்கி விட்டார்கள்.

மாதவி—எப்படி ?

தமயந்தி—விலை மாதர் என்ற கூட்டத்தை வகுத்தார்களே மனிதர்கள், அந்த பேதமையை என்னவென்று சொல்லுவது ?

மாதவி—பேதமை என்பது மாதர்க் கணிகலன் என்கிறார்களே, பேதமையை ஆண்களுக்கு அணிகலனாக, நீங்கள் செய்துவிட்டீர்களே !

தமயந்தி—பின்னர் விலைமாதர்களினால், வீடும் நாடும் பாழாய்ப் போச்சு என்று பழி கூறப்படுகிறது!

மாதவி—விலைமாதர்களான எங்கள் வாயால் இவையெல்லாம் சொல்லப்படுமா? நீங்கள் ராணியாக இருக்க வேண்டும். அதனாலேதான் இவ்வளவு தைரியமாகப் பேசுகிறீர்கள்.

தமயந்தி—நான் இன்னாரென்று ஏன் தெரிவித்துக் கொள்ளக் கூடாது? நான் தமயந்தி.

மாதவி—ஆகா, அப்படியா? உங்களுக்கு நேர்ந்த துன்பங்கள் அனைத்தையும் கேள்விப்பட்டிருக்கிறேன். காதலுக்கு, ரதி மன்மதனையும், நள தமயந்தியையும் உபமானங்களாகச் சொல்லுவது பூலோக வழக்கமல்லவா?

தமயந்தி—அப்படி யிருந்தும் பாதிச் சேலையைக் கிழித்துக் கட்டிக்கொண்டு, என்னை எழுப்பாமல், "கானகத்தில், காரிருளில் தன் காதலியை விட்டுப் போன" வேந்தனுடைய மனத்தின் மர்மம் இன்றைக்கும் எனக்கு விளங்கினதே யில்லை.

மாதவி—மர்மத்தைப் பற்றிச் சொல்லுகிறீர்களே! சிறிய வேடிக்கையைக் கேளுங்கள்.

தமயந்தி—சொல்லுங்கள்.

மாதவி—வசந்த காலத்தில், காவிரிப்பூம்பட்டின கடற்கரையில், விழா கொண்டாடுவது வழக்கம். அந்த விழாக் காலத்தில், ஒரு சமயம் என் காதலன் கோவலனும் நானும் கடற்கரைக்குப் போய், இயற்கையின் வனப்பில் ஈடுபட்டிருந்தோம். அப்பொழுது அவர்,

பவள உலக்கை கையால் பற்றி
தவள முத்தம் குறுவாள் செங்கண்
தவள முத்தம் முறுவாள் செங்கண்
குவளையல்ல கொடிய கொடிய

★

சேரன் மடவன்னம் சேரன டையொவ்வாய்
சேரன் மடவன்னஞ் சேரன டையொவ்வா

யூர் திரை நீர்வேலி யுழக்கித் திரிவாள் பின்
சேரன் மடவன்னம் சேரன டையொவ்வாய்

என்று பாடிக்கொண்டே, வீணையில் வாசித்தார்.

தமயந்தி—சரி !

மாதவி—பிறகு, என்னைப் பாடென்றார்.

நான்.

கானல் வேலிக் கழிவாய் வந்து
நீ நல்கென்றே நின்றார் ஒருவர்
நீ நல்கென்றே நின்றார் அவர் நம்
மானேர் நோக்க மறப்பார் அல்லர்.

என்று அவர் பாட்டுக்கு எதிர்ப்பாட்டாக வீணையில் வாசித்தேன். என் மனம், வேறொரு ஆடவன் பேரில் சென்று விட்டதாகக்கொண்டு, ஆத்திர மூண்டு, என்னைத் திரும்பிப் பார்க்காமலே, அவர் விரைந்து சென்று விட்டார். இந்த மர்மத்தை நீங்கள் விளக்கிச் சொல்லுவீர்களா? நகமும் சதையும் போலிருந்த எங்களுக்குள் ஏன் அநியாயமான சந்தேகம் வரவேண்டும்?

தமயந்தி—முன் வினைப்பயன் என்று உலகம் சொல்லும். அது முழுதும் உண்மை என்று எனக்குத் தோன்றவில்லை.

மாதவி—ஜன்மாந்திர பலன் இல்லாவிடில், கண்ணுக்கோ, அல்லது அறிவுக்கோ புலப்படக்கூடிய காரணமில்லாமல், சில நிகழ்ச்சிகள் நேருவதற்கு, சமாதானம் சொல்ல முடியாது.

தமயந்தி—ஜன்ம பலன் என்று சொல்லிவிட்டால், உலகத்தில், செங்கோல், சட்ட திட்டம் முதலியவைகள் வேண்டாம். ஜன்ம பலன் படிக்கு, நடப்பதை பார்த்து அனுபவித்துக் கொண்டிருக்கலாமே!

மாதவி—அப்புறம்!

தமயந்தி—கண்மூடித்தனமாகக் காரியம் செய்வதற்கும் எளியவர்களையும் அபலைகளையும் ஏய்ப்பதற்கும், கர்ம பலன் என்ற தத்துவத்தை உபயோகித்துக் கொள்ள முடியும்.

மாதவி—உண்மை !

தமயந்தி—உறுதி, வாய்மை, தைரியம் கருணை முதலிய நற்குணங்களை பயிற்சி செய்துகொள்ள ஊக்க மில்லாமல் போய்விடும்.

மாதவி—எல்லாரையும் அடக்கியாளும் மன்ன னுடைய தனிப்பெருங் காதலியாக நீங்கள் இருந்தமை யால், இவ்வாறு தைரியமாகப் பேசுகிறீர்கள்.

தமயந்தி—நீங்கள் பேசமாட்டீர்களே!

மாதவி—பேசமுடியாது. எங்களைப் போன்ற எளியவர்களுக்கு அதுவும் எளிய ஸ்திரீகளுக்கு-அதிலும் விலைமாதர்களுக்கு-எந்த விதத்திலும் சுதந்திரம் கிடை யாது. எதையும் நாங்கள் தலைவிதி என்றும் முன் வினைப்பயன் என்றும்தான் சொல்லிக்கொண்டு மனத் தில் அமைதியை அடையப் பெறவேண்டும்.

தமயந்தி—நீங்கள் சொல்லுவதும் ஒருவாறு உண் மைதான். உலகத்தில் மனிதர்கள் என்று தோன்றி, எத்தனை ஆயிரம் வருஷங்களோ ஆகியிருக்க வேண்டும். அப்படி யிருந்தும் ஆண், பெண்ணைக் கைவிடுவது, பெண், ஆணைக் கைவிடுவது என்ற சம்பவங்கள் நேரும் மர்மம் இன்னதென்று அறியமுடியவில்லையே !

மாதவி—எத்தனை மகான்கள் தோன்றியிருக்கிறார் கள், எத்தனை நூல்களை எழுதியிருக்கிறார்கள், எவ்வ ளவோ ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன. இருந்தா லும், அறியக் கூடவில்லை.

தமயந்தி-ஆனால், அரைகுறைப் புலவர்களும் செல் லாக் காசுக் கவிஞர்களும், சிற்றின்பம் என்று பகடி செய்கிறார்கள். ஒரு விஷயத்தின் மர்மம் புலப்படா விடின், அதைத் திட்டுவதும் கேலி செய்வதும் பொருத்தமாகுமா ?

மாதவி—பொருத்தமாகாதுதான். நான் உங்களை ஒன்று கேட்கட்டுமா?

தமயந்தி—ஒன்றல்ல. எத்தனை வேண்டுமானாலும் கேட்கலாம்.

மாதவி-நீங்கள் இரண்டாவது சுயம்வரம் ஏற்பாடு செய்தீர்களே! அதற்கு உங்கள் தகப்பனர் முதல் எல்லாரும் சம்மதித்தார்களே, எப்படி உங்களுக்கு துணிவு ஏற்பட்டது?

தமயந்தி—அந்தத் துணிவை பூலோகம் ஒரு தந்திரம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறது.

மாதவி—மீண்டும் உங்கள் காதலன் நளனை அடைவதற்காகச் செய்த தந்திரம் என்று பூலோகம் எண்ணிக் கொண்டு வந்திருக்கிறது என்பது எனக்குத் தெரியும்.

தமயந்தி—தந்திரம் என்பது ஒரு பகுதி உண்மையே. என்னை என் காதலன் நள்ளிரவில் பிரிந்தபின், என் மனம் புண்பட்டுப் போயிற்று. பதறி விழித்து, வழி தெரியாமல், தள்ளாடி நடக்கையில், பாம்பு சீறிக் கொண்டு எதிர்வந்தது.

வெய்ய அரவின் விஷவாயு னுட்பட்டேன்
ஐயன்மீர் உங்க்ட்கபயம் யான் உய்ய அருளீரோ

என்று ஒரு வேடனைப் பார்த்து வேண்டிக்கொண்டேன், அந்தப் பாபி, பாம்பைக் கொன்ருன். ஆனால், என்னைப் பற்ற வெறிகொண்டான். அவன் கையில் அகப்படக் கூடாது என்று ஓடினேன், ஓடினேன். அவன் விட்ட பாடில்லை. ஓடுவதில் பயனில்லை என்று நின்றேன். அவனை தீ கக்கும்படியாக விழித்துப் பார்த்தேன். அவ்வளவில், "சிலைவேடன் நீருய் விழுந்தான் நிலத்து."

மாதவி—அப்படியா?

தமயந்தி—தமது ராஜ்யமனைத்தையும் காக்கும் தொழிலை ஏற்றுக்கொண்ட எனது காதலனுகிய காவலன், என்னையே காக்காமல், கைவிட்டுப் போனதிலே எனக்கு மனதிலே, லேசாகக் கசப்பு உண்டாயிற்று.

மாதவி—இயற்கை. இதைத்தான், கற்பு நிலை தவறல் என்று உலகம் உளறும். நான் கற்பனை செய்து பார்க்கிறேன். அடர்ந்த கானகம், காரிருள், பாதித் துகில், மாயமாய்க் காதலன் மறைந்து போனது,

நீங்களோ அரசன் மகன், அரசன் மனைவி, மக்களைப் பிரிந்த மனத் துயரம், திக்கற்ற நிலைமை...இந்த சந்தர்ப்பத்தில் உள்ளம் கசந்து போவது இயற்கை தான்.

தமயந்தி—பின்னர், பாம்பின் பாரிவேட்டை, வேடனின் வெறி வேட்டை!

மாதவி—ஆமாம், அம்மா! அப்பொழுது மனம் புயலாட்டம் ஆடித்தானிருக்கும். காவிரிப்பூம்பட்டினத்து கடற்கரையில், என் உள்ளம் துடித்துப் போகவில்லையா?

தமயந்தி—இந்தக் கசப்பே, எனது இரண்டாவது சுயம்வர விளம்பரத்துக்கு ஒரு காரணம். என் மனம் கானகத்தில் துடித்ததைப் போல, என் காதலனுடைய உள்ளமும் ஒரு நிமிஷமாவது சுயம்வரத்தைக் கேட்டுக் கலங்கவேண்டும் என்பது எண்ணம்.

மாதவி—பழிக்குப் பழியா?

தமயந்தி—இல்லை, கற்பனை இல்லாத சந்தர்ப்பத்தில், அனுபவத்தின் மூலமாகத்தான் மனிதர்களின் மனதை மாற்ற முடியும். என் காதலனுக்கு, எக்காரணத்தைக் கொண்டேனும், பொறுப்பில்லாத தன்மை ஏற்பட்டிருக்கப்படாது. நானும் பொறுப்பில்லாமல் நடந்துகொண்டது போல காண்பித்துக்கொண்டால், அவர் மனம் துடித்துப் போகும் என்று எனக்குத் தெரியும். காதலன், காவலன் என்ற இரட்டிப் பொறுப்பையும் அவர் மறந்தது, எனக்கு சற்றேனும் பிடிக்கவில்லை. அதை அவருக்கு உணர்த்துவதற்கு, வேறு வழி தெரியாமல், இரண்டாம் சுயம்வர ஏற்பாடு செய்தேன்.

மாதவி—"நான்தான் காதலியைக் கைவிட்ட கபோதியாயிற்றே." என்று அவர் கூச்சப்பட்டுக் கொண்டு, சுயம்வரத்துக்கு வராமல் மறைந்தே போயிருந்தால்...;

தமயந்தி—சுயநலமும் கோழைத்தனமும் சிறிது காலந்தான் பேயுரு எடுத்து நிற்கும். தியாகமும் காத

லும் மறுபடியும் மனித உள்ளத்தில் குடிகொண்டு விடும். கோழைத்தனமும் சுயநலமும் நீடித்து நிற்கும் உணர்ச்சிகளாயின், பூலோகம் வெகு காலத்துக்கு முன்னமேயே அழிந்துபோயிருக்கும்.

மாதவி—ஆமாம்!

தமயந்தி—காதல், தியாகம் ஆத்திரம் முதலியவைதான் கற்புக்கு ஆதாரமா யிருப்பவை. கற்புதான். அறத்துக்கு அடிப்படையாக இருப்பது. ஸ்திரீகளின் மனது கோணிவிட்டால், உலகத்துக்கு நாசம் ஏற்படுவது நிச்சயம். ஆயிரம் முனிவர்களும், பதினுயிரம் தேவர்களும், லட்சக்கணக்கான சித்தர்களும், கோடிக்கணக்கான சாதுக்களும் திருமூர்த்திகளும் சேர்ந்து, உலகத்தைக் காப்பாற்ற முயன்ருலும் முடியாது.

மாதவி—ஸ்திரீயின் மனம் கோணுமல் இருக்குமா?

தமயந்தி—ஆண், தனது பொறுப்பை உணர்ந்தால், பெண்ணின் மனம் ஒருநாளும் கோணுது.

இளங்கோ—சாத்தனுர்

ஒருவன்—என்ன அண்ணே, இங்கே உட்கார்ந்துட்டிருக்கீங்க ! சொர்க்கத்திலே, இந்த இடத்துக்கு என்ன பேரு? மறந்து போச்சே ! நெஞ்சிலே இருக்கு வாயிலே வல்லே.

மற்றவன்—இந்த இடத்துக்கு புலவர் மேடு என்று பெயர். இன்னிக்கு, இரண்டு பேருங்க பேசப் போருங்களாம் !

ஒருவன்—யாரு இரண்டு பேருங்க ?

மற்றவன்—இளங்கோ அடிகளும் சாத்தனுரும்,

ஒருவன்—என்னமோ பேர் சொல்றீங்களே ! அவுங்க யாரு? என்ன பேசப்போருங்க ?

மற்றவன்—இளங்கோ அடிகளே, தம்பி ! உனக்குத் தெரியாதா ? சாத்தனுரை பற்றி கேள்விப் பட்டதேயில்லையா ?

ஒருவன்—நாங்கள் எல்லாம் மண்ணை தோண்டி பொளச்சவங்கதானே ? எங்களுக்கு பெரிய இடத்துப் பேரெல்லாம் எப்படித் தெரியும் ? பேரைப் பாத்தா, இவுங்க ரெண்டுபேரும் தமிழ் நாட்டுப் பேர்வழிகள் என்று தோணுது.

மற்றவன்—நல்லவேளே ! அதாச்சும் தோணிச்சே!

ஒருவன்—என்னுங்க ! எங்களுக்கெல்லாம் என்ன தெரியும் ? எங்களுக்கு ஏதாச்சும் யாரு சொல்ருங்க ? குடியானவன்னு இளக்காரமான பேச்சுத் தானே ?

மற்றவன்—அதிருக்கட்டும் ! இளங்கோ அடிகள் சேரநாட்டு அரசனுடைய தம்பி. அவர் புத்தமதத்தில் சேர்ந்து, சன்னியாசம் வாங்கிக் கொண்டவர், சுமார் 1800 வருஷங்களுக்கு முன், தமிழ் நாட்டிலே பிறந்தவர். அவர் தான் கண்ணகி கோவலன் சரித்திரத்தை சிலப்பதிகாரம் என்ற புஸ்தகமாகப் பாடியிருக்கிருர்.

ஒருவன்-அப்படீங்களா? நீங்க இப்பசொல்ருப்பலே யாராச்சும் இதையெல்லாம் எங்களுக்கு எடுத்துச் சொன்னுத்தானே ? நாங்க மண்ணை நோண்டிக்கிட்டு கிடக்கோம். அவுங்க ஆகாசத்தைப் பார்த்து பேசராங்க.

மற்றவன்—வாஸ்தவம் தான். சாத்தனுர் என்பவரை கூல வாணிகள் சாத்தனுர் என்றும் சீத்தலை சாத்தனுர் என்றும் அழைப்பதுண்டு. அவர் சிலப்பதிகாரத்துக்கு தொடர்ச்சியாக மணிமேகலை என்று ஒரு நூல் எழுதியிருக்கிருர்.

ஒருவன்—அது எதைப் பத்திங்க ?

மற்றவன்—கோவலனை மயக்கிய விலை மாது மாதவியையும் இவர்கள் இரண்டு பேருக்கும் பிறந்த மணிமேகலை என்ற பெண்ணைப்பத்தியும் மணிமேகலை சொல்லுது.

ஒருவன்—இரண்டும் ரொம்ப நல்ல நூல்கள் தானுங்களோ? மண்ணை நோண்டற எங்களுக்கு, படிக்கிறதுக்கு கண்ணில்லாமலே பண்ணிப்பிட்டாங்க !

மற்றவன்—இரண்டு நூல்களும் வெகு அபூர்வமான நூல்கள். படிக்கப்படிக்கத் தெவிட்டாத நூல்கள்.

ஒருவன்—அவுங்க ரெண்டுபேரும் இப்ப பேசப்போருங்களோ ? என்ன பேசப் போருங்க ?

மற்றவன்—இன்னது என்பது கேட்டால்தான் தெரியும். அதோ முதலிலே பேசிக்கிட்டு வாராங்களே அவுங்கதான் இளங்கோ அடிகள். பக்கத்திலே வரா வங்க சாத்தனுர்.

ஒருவன்—சரித்தானுங்க. இங்கே மறஞ்சுகிட்டு அவுங்க பேசிக்கிறதை கேக்கலாங்களா ?

மற்றவன்—மறஞ்சு இருக்கவேண்டாம். அவுங்க பேசறது, காதிலேவிழுருப்பலே தூரத்திலே உக்காந்துக் கிட்டு இருப்போம். இப்ப பேசருங்களே, அவுங்க இளங்கோ அடிகள்.

இளங்கோ—சாத்தனுரே! இதுவா தங்கள் கருத்து?

சாத்தனுர்—ஆமாம் !

இளங்கோ—அதை இன்னொருதரம் திருப்பிச் சொல்லுங்கள்.

சாத்தனுர்—மனிதர்களின் தீக்குணங்களை அறவே ஒழித்து விடமுடியாது.

இளங்கோ—அப்படி ஏன் தாங்கள் சொல்லுகிறீர்கள்? தாங்கள் சொல்லுவதற்கு ஆதாரமென்ன ? தீக்குணங்கள் என்று எவைகளை தாங்கள் குறிப்பிடுகிறீர்கள்?

சாத்தனுர்—மனிதனுடைய உடல் உறுதியையும் மன உறுதியையும் கெடுத்து அவனைப் பலவீனனுகச் செய்யும் தன்மைகள் யாவும் கெட்ட குணங்கள் என்ற பாகுபாட்டில் வந்து அமையும்.

இளங்கோ—கட்டுமாருத தன்மையைக் கொடுப்பவைகள் எல்லாம் தீக்குணங்கள் என்கிறீர்கள்.

சாத்தனுர்—நான் விளக்கிச் சொல்லுகிறேன். ஜீரணத்தைக் கெடுத்து நோயை வருவித்துக் கொள்ளும்படியாக உண்ணுதல் தீக்குணம்.

இளங்கோ—சரி !

சாத்தனுர்—நரம்புத் தளர்ச்சியைக் கொடுக்கும் உடல் இன்பம், மற்ருெரு தீக்குணம்.

இளங்கோ—பிறகு !

சாத்தனுர்—மனத்தின் உறுதியைக் கெடுக்கும் சந்தேகம் மற்ருெரு தீக்குணம்.

இளங்கோ—நல்லது !

சாத்தனுர்—ஆராய்ச்சிக்குக் கட்டுப்படாத செய்தியை நம்புவது தீக்குணம். இந்த தன்மை மனிதனை மூட பக்தனுகவும் முழு முட்டாளாகவும் செய்து விடுகின்றது.

இளங்கோ—விளக்கத்துக்காக, தாங்கள் கூறிய தீக்குணங்களை போக்கடிக்க முடியாது என்று சொல்லுகிறீர்கள் ?

சாத்தனுர்—முடியாது என்பதே என் கருத்து.

இளங்கோ—மனிதர்களை தேவர்களாகச் செய்ய முடியும்.

சாத்தனுர்—தங்களுடைய நம்பிக்கையை கெடுக்க எனக்கு மனமில்லை. ஆனுல் அந்த நம்பிக்கைக்கு ஆதாரமில்லையே என்றுதான் வருந்துகிறேன்.

இளங்கோ—முடியாது என்று சொல்லுவதும் நம்பிக்கையைச் சேர்ந்த இனம் தானே? தாங்கள் 'முடியாது' என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?

சாத்தனுர்—தாங்கள் மிகவும் அழகாக இயற்றியிருக்கும் சிலப்பதிகாரம் என்ற நூலையும் அதன் கதை வரலாற்றையும் சற்று கவனித்தால், நான் சொல்லுவதற்கு ஆதாரமிருக்கிறது என்பது புலப்படும்.

இளங்கோ—சொல்லுங்கள் பார்ப்போம்.

சாத்தனுர்—கோவலன், பயிற்சியும் பண்பும் உள்ளவன் தானே? கட்டழகியான கண்ணகி, அவனுக்கு மனைவியாக வாய்த்திருக்க அவனது மனம் மாதவியை ஏன் நாடிற்று? நாடின அவனது உள்ளத்தில், பின்னர் மாதவியைப்பற்றி ஏன் சந்தேக முண்டாயிற்று? கண்ணகி, எப்படியாவது கோவலனை, மாதவி வீட்டுக்குப் போகாமல் தடுத்திருக்கக் கூடாதா? அவளது பொறுமை விபரீதமான பொறுமையாகி விட்டது.

தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்க எண்ணின கதை யாயிற்று,

இளங்கோ—இதினின்றும், பயிற்சியால், தீக்குணங் களை போக்க முடியாது என்பது எவ்வாறு ருசுவாயிற்று?

சாத்தனார்—பயிற்சியால் பண்படைந்த கோவல னுடைய உள்ளத்தில் எவ்வாறு சிதைவு ஏற்பட்டது? அவனுடைய மனம் மாதவியை நாடலாமா? கண்ணகி கற்பிற் கரசி என்பது உண்மை. ஆனால், அவளுடைய கற்பினால், கோவலனுக்கு யாதொரு நற்பயனும் இல் லாமல் போய்விட்டது. தன்னளவிலே, கண்ணகி தற் காப்பு செய்துகொண்டாளே அல்லாமல் தனது கணவ னையும் சேர்த்து பாதுகாக்க முடியாமல் போய் விட்டதே!

இளங்கோ—இப்பொழுது சரியான முறையில் வாதத்தை தாங்கள் கொண்டு வந்து விட்டீர்கள். நான் குணங்களை பயிற்சி செய்கிற வகையில், தவறு இருக்கிறது என்றுதான் தங்கள் சொற்களிலிருந்து ருசுவாகின்றது.

மற்றவன்—என்னுங்க! நீங்க ரெண்டு பேரும் ரொம்ப பெரியவங்க! என்னைப் போல குடியானவர் களுக்கு விளங்கருப்பலே பேசப்படாதுங்களா? நீங்கள், கண்ணகி செய்றது தவறு என்கிறீர்களா? கோவலன் செய்தது மனித சுபாவம் என்கிறீர்களா? கோவலனை அடியிலேயே மாதவி வீட்டுக்குப் போகாமல் செய் திருக்கலாம் என்கிறீங்களா?

சாத்தனார்—நீங்க யாரு? எங்கே மறஞ்சு நாங்க பேசினதைக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள்?

மற்றவன்—நீங்க பெரிய மனுசருங்க! நாங்க சின்ன மனுசருங்க! நீங்க நல்ல மாதிரியாப் பேசப்போறீங்க என்னு இந்த அண்ணன் சொல்லிச்சு. நீங்க தாராள மாய் மனசை விட்டுப் பேசவேணும் இன்னு நாங்கள் ஒதுங்கியிருந்தோம்,

இளங்கோ—நல்லது! நீங்க செய்தது ரொம்ப சரி! உங்களுக்கு எது விளங்கவில்லை?

ஒருவன்—கெட்ட குணங்களை அடியோடு ஒழித்து விட முடியும் என்று நீங்க சொன்னீங்க. சாத்தனார், முடியாது என்றாருங்க. திடீரின்னு, கற்பு எங்கறதுக்கு புதிசா அர்த்தம் சொல்லுறீங்க. ஒண்ணும் எங்களுக்கு சரியாப் புரியல்லே.

இளங்கோ—இப்பொழுது நீங்கள் சொன்னது அவ்வளவும் உண்மைதான். ஆனால், ஏன், அதெல்லாம் உங்களுக்கு விளங்கவில்லை என்று தெரியவில்லை.

சாத்தனார்—பெரிய விவாதங்களில் கலந்து கொள்ளுவதற்கு, சிறிதளவாவது பயிற்சி வேண்டும்.

மற்றவன்—நீங்க பெரிய மனுசருங்க. இப்படி சொல்லிடலாங்களா? எங்களைப்போல எளியவங்களுக்கு, படிப்பில்லாதவங்களுக்கு, பெரிய சங்கதிகளை விளங்கும்படியா சொல்லவேண்டியது ஒங்க பொறுப்பில்லையா?

சாத்தனார்—பக்குவமான சீடனுக்குத்தான், குரு உபதேசம் செய்யலாம், செய்ய முடியும். கண்டபடி எல்லாருக்கும் உபதேசம் செய்தால், அது பயன்படாது.

ஒருவன்—பெரியவுங்க எல்லாரும் இப்படி சொல்லலாங்களா? தெரியாதவங்களுக்கு தெரிஞ்சவங்க, அவுங்களுக்கு தெரிஞ்சதை சொல்லிக் கொடுத்தால்தான், எல்லாருக்கும் உண்மை விளங்கும்.

இளங்கோ—நீங்கள் சொல்லுவதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். அறிவை மூடி மூடி வைத்துக்கொண்டிருக்கலாகாது. அப்படி மூடி வைத்துக்கொண்டிருந்தால், சாத்தனார் அவர்கள் சொல்லுவதைப் போல, மனிதர்களுடைய கெட்ட குணங்களை ஒரு நாளும் ஒழிக்க முடியாது.

சாத்தனார்—முயற்சியால், பொருள்களின் சுபாவத்தைக் கூட மாற்ற முடியுமா? இரவு பகல், சுக துக்கம் என்பது போல, மனித சுபாவத்திலும் நல்ல குணங்

களும் இருக்கின்றன; கெட்ட குணங்களும் இருக்கின்றன. ஆகவே, இரண்டு குணங்களும் கலந்திருப்பது மனித சுபாவம். மனித சுபாவத்தை மாற்றமுடியாது.

மற்றவன்—அந்தந்த விதையின் தன்மையை மாற்ற முடியாது எங்கறது போல, அப்படித்தானுங்களே?

சாத்தனர்—ஆமாம்! நீர் பொறி தட்டினது மாதிரி சொல்லிவிட்டீர்.

இளங்கோ—இரவு பகல், சுக துக்கம் என்பவை வெறும் உபமானங்கள். ஒரு உபமானத்தைக்கொண்டு, மற்ெருரு வாதத்தை ருசுப்படுத்த முடியாது.

சாத்தனர்—கெட்ட குணங்கள் இருப்பது மனித சுபாவமல்லவா?

இளங்கோ—மனித சுபாவமல்ல. மனிதன் கெட்ட குணங்களிலே ஒருவித ருசியை பழக்கிக்கொண்டு விட்டு, பிறகு, அதையும் சேர்த்து, தன் சுபாவம் என்று சொல்லுகிருன்.

சாத்தனர்—தாங்கள் இப்பொழுது செய்வது வெறும் தடவடிவாதம்.

இளங்கோ-அப்படியா? எல்லாவற்றையும் செய்து பார்த்தாகி விட்டது. ஆனல் பலிக்கிற மாதிரி இல்லை என்று பூலோகத்தில் சொல்லிக் கொள்ளுகிருர்களே, அது எவ்வளவு வரையில் உண்மை என்று தங்களுக்கு தோன்றுகிறது?

சாத்தனர்—பல சந்தர்ப்பங்களில் அது வெறும் சமாதானமாகவே இருக்கும். சோம்பல் மிகுதியால், எல்லாம் செய்து பார்த்தாகி விட்டது என்கிருர்கள். அல்லது யோசனை செய்து பார்க்கும் திறமைக் குறைவினல், அல்லது காரியம் செய்யும் சரியான முறை தெரியாமல் எல்லாம் செய்து பார்த்தாகி விட்டது. பலிக்கிறது மாதிரி இல்லை என்று ஆடம்பரமாக பொய்யும் சொல்லி விடுகிருர்கள்.

இளங்கோ...இவ்வளவு வரையில் தாங்கள் ஒப்புக் கொள்ளுகிறீர்களா? முயற்சிக் குறைவினால் தானே பொய் சொல்லும்படி தூண்டுதல் ஏற்படுகின்றது?

ஒருவன்—ஆமாங்க! அண்ணே! அவுங்க இப்போ பேசினது சரியான பேச்சுங்க!

மற்றவன்—சொச்சத்தையும் கேப்போம்.

சாத்தனார் — அதுதான் சரி, பொறுமையுடன் கேளுங்கள். அப்படிச் செய்தால்தான் உண்மை விளங்கும்.

மற்றவன்—நீங்கதான் செத்தே முந்தி சொன்னீங் களே, கண்ணகி அவ்வளவு பொறுமையா யிருந்திருக் கப்படாது என்று.

இளங்கோ—சாத்தனாரே! படித்தவர்கள் தான் பெரியவர்கள் என்ற தவறான எண்ணம் இனியும் தேவை யில்லை. புத்திமான்களும் குணவான்களும்தான் பெரிய வர்கள்.

சாத்தனார்—படிப்பு இருந்தால்தான் பல சங்கதி களையும் சீர்தூக்கிப் பார்த்து யோசித்து, தக்க முடி வுக்கு வரமுடியும். படிப்பில்லாதவர்களின் பேச்சு ஆவேசம் வந்து ஆடுவதைப் போல.

மற்றவன்-என்னாங்க, அப்படி சொல்லிப்பிட்டீங்க!

இளங்கோ—பயிற்சியால், எவ்வித தீய தன்மை களையும் போக்கிக்கொள்ள முடியும் என்று சொன் னேனே, அதை கவனிப்போம்.

சாத்தனார்—அந்த விஷயம் ரொம்ப நேரமாக, தொங்கலிலே விழுந்துகொண்டே வருகிறது!

இளங்கோ—இருக்கட்டும் பொதுவாக நல்ல தன் மைகள் என்று சொல்லப்படுவதையும் மிகவும் அழகாக வும் சிரத்தையுடனும் பயிற்சி செய்தால், கெட்டது என்பது பூலோகத்திலே இருக்கவே இருக்காது!

சாத்தனார்—எப்படி?

இளங்கோ—கண்ணகியின் கற்பை கவனிப்போம். கௌதமன் என்ற முனி இருந்தாரே.

சாத்தனுர்—ஆமாம்! அகலிகையை மணந்த கௌதமன்.

இளங்கோ—அவரே! அவருடைய கற்பும் கண்ணகியின் கற்பைப்போல தற்காப்பு கற்பு. அந்த கற்பிலே கலேயின் வசீகர மில்லே. ஆகவே, அகலிகை கற்புத் தவறினுள். கண்ணகியின் கற்பிலும் கலே வசீகரம் இல்லே. ஆகவே, எல்லாம் பயங்கரமாக முடிந்தன.

சாத்தனுர்—உண்மைதான்.

மற்றவன்—என்னுங்க! கலே வசீகரம் எங்கிறீங்களே, அது என்ன ?

இளங்கோ—காது, மூக்கு, கை, கால், கண் முதலியவைகளே ஒட்ட வைத்தால், மனிதக் கூடு ஒன்று உண்டாகிவிடும். எலும்புக் கூட்டைப் பார்த்து ஆனந்தப் பட முடியுமா? தகதக வென்று நெருப்புத் துண்டு இருக்கிறது. அதைத் தொட முடியுமோ?

ஒருவன்—முடியாது.

இளங்கோ—உயிரிலே, ஆகர்ஷண சக்தியும் பொருந்தியிருந்தால், அதற்கு கலே வசீகரம் என்று பெயர். அந்தக் கலே வசீகரத்தோடு நல்ல குணங்களே பயிற்சி செய்யவேண்டும். எலும்புக் கூட்டைப் போல, மூர்ச்சை ஸ்தானத்தை அறியாமல், காரியம் செய்வது தற்காப்பாக அமையலாம். ஆனுல், அதனுல் பயன் இல்லே.

சாத்தனுர்—தீய தன்மைகளே எப்படி ஒழிப்பது? எவ்வாறு ஒழிக்க முடியும்?

இளங்கோ—செம்பொன் நடமாட, குயவன் குடிப் போவான் என்ற பழமொழி தங்களுக்கு மறந்துபோய் விட்டதா? இருளே வெருட்டுவதற்கு நாம் என்ன செய்கிறேும்? இருட்டோடு, நாம் மல்யுத்தம் செய்கிறேமா? வெளிச்சத்தை ஏற்றினுல், இருட்டு இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போகிறது.

மற்றவன்—சரியான பேச்சுங்க!

இளங்கோ—கெட்ட குணங்களோடு நாம் சண்டை போடவேண்டியதில்லை. நல்ல தன்மைகளைப் பரப்பினால், கெட்டவை தாமாகப் போகின்றன.

சாத்தனார்—நல்ல தன்மைகளைப் பரப்பினால் தானே?

இளங்கோ—கை கண்ட அவிழ்தத்தை பிரயோகம் செய்யாமல் போனால், அது மடமை யாகும். நல்ல தன்மைகளைப் பரப்புவதைக் காட்டிலும், பயிற்சி செய்வதைக் காட்டிலும், வேறு வேலை மனிதனுக்கு என்ன இருக்கிறது?

சாத்தனார்—மனித சுபாவத்தைப் பூரணமாய் உணராமல், தாங்கள் பேசுகின்றீர்களோ என்ற சந்தேகம் எனக்கு உண்டாகின்றது.

இளங்கோ—அந்த சந்தேகம் தங்களுக்கு வேண்டாம். புராணக் கதை ஒன்று சொல்லுகிறேன். பாண்டவர்கள் பாஞ்சாலி உள்பட சொர்க்கத்துக்கு வர விரும்பினார்கள். சரி என்றார் கண்ணன். ஆனால். சொர்க்கத்துக்கு செல்லும்பொழுது, திரும்பிப் பார்க்கலாகாது; பார்த்தால், பார்த்த இடத்திலே, பார்த்தவர்கள் கல்லாய்ச் சமைந்து போய் விடுவார்கள் என்று கண்ணன் நிபந்தனை விதித்தார்.

மற்றவன்—அந்தக் கதை நினைவுக்கு வருதுங்க. பீமன், பாஞ்சாலி உள்பட அஞ்சு பேரும் திரும்பிப் பார்த்து கல்லாய் போய்ட்டாங்க. தருமரும் அவர் நாயும் திரும்பிப் பார்க்காமல் சொர்க்கம் சேர்ந்தாங்க.

இளங்கோ—அதுதான் கதை. மன உறுதியோடு சொர்க்கம் போய்ச் சேர்ந்த தருமபுத்திரனுடைய சுபாவத்தை அசல் மனித சுபாவம் என்று ஏன் சொல்லக்கூடாது? சஞ்சலம், சோம்பல், தோல்வி-இவைகள் மனித இயற்கையின் அறிகுறிகள் அல்ல. உறுதி, ஊக்கம், வெற்றி-இவைகள்தான் மனித இயற்கையின்

அறிகுறிகள். ஆகவே இவை தீய குணங்களை அறவே போக்கடிக்க முடியும்.

சாத்தனார்—என்னவோ?

ஒருவன், மற்றவன்—அவுங்க, இளங்கோ அடிகள் சொன்னது சரி இண்ணு எங்களுக்கு தோணுதுங்க.

காளிதாஸன்—மைகல் மதுசூதன தத்தர்

உலகப் பிரசித்திபெற்ற 'சகுந்தலை' நாடகத்தை எழுதியவர் காளிதாஸன் என்று யாருக்குத்தான் தெரியாது? உஜ்ஜேனியில், மிகவும் கியாதியுடன் அரசாண்ட விக்கிரமாதித்தனுடைய சந்ததியில் தோன்றிய போஜராஜனுக்கு நண்பனாகவும், சமஸ்தான வித்வானாகவும் காளிதாஸன் விளங்கினார் என்பது எல்லாருக்கும் தெரியும். கவிகளுக்குள்ளே உயர்ந்தவர் என்று காளிதாஸனுக்கு வடமொழியில் ஒரு விருதும் உண்டு.

மைகல் மதுசூதன தத்தர் வங்காளத்தில் சுமார் அறுபது வருஷங்களுக்கு முன் வாழ்ந்த பாரிஸ்டர். அவர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார். "நான் இங்கிலீஷில் பேசுகிறேன்; இங்கிலீஷில் எழுதுகிறேன். சொப்பனம் இங்கிலீஷிலேயே கண்டால், நான் எவ்வளவு களிப்புள்ளவனாயிருப்பேன்" என்று தத்தர் ஒரு சமயம் சொன்னார், இங்கிலீஷில் அவ்வளவு மோகம் அவருக்கு. இருந்தாலும், வங்காளி பாஷையில், அபூர்வமான நூல்களை எழுதியிருக்கிறார். பிரசித்திபெற்ற நாடகாசிரியர்.

இப்பேர்பட்ட சிறந்த கலைஞர்கள் இருவர் சொர்க்கத்தில் சந்தித்தால், நாடகத்தைப் பற்றிப் பேசுவதுதானே இயற்கை? ஆனால், நிகழ்ச்சிகள் பெரும்பாலும் தர்க்க சாஸ்திரத்துக்கு கட்டுப்பட்டு நடப்பதில்லை. விவாதத்திலே கட்டுப்படாக, விஷயத்தைப் பேச

வேண்டும். சம்பாஷணையில் அப்படி இருக்கவேண்டு மென்பதுண்டா ? குழந்தைகள் 'நாலு மூலைத்தாச்சி' என்று ஒரு விளையாட்டு விளையாடும். அதைப்போலவே சம்பாஷனையில், நெட்டுப் பாய்ச்சல், குறுக்குப் பாய்ச் சல், ஏய்த்தல், பிரமிக்க வைத்தல் முதலிய பல சாக ஸங்கள் இருக்கலாமல்லவா?

இப்பொழுது முதலில் பேசுகிறரே, அவர்தான் காளிதாஸன். மற்றவர் மைகல் மதுசூதனர் என்று சொல்லவும் வேண்டுமா ?

காளிதாஸன்—மதுசூதனர் இங்கே இந்த நேரத் துக்கு வருவதாகச் சொன்னரே ! இங்கிலீஷ் கற்றவர் கள் குறிப்பிட்ட நேரத்தில் காரியத்தைச் செய்வார் கள் என்று சம்பிரதாயப் பேச்சாக முழங்குகிறதே!

மதுசூதனர்—நீங்கள் அதைக்குறையாகச் சொல்லி முடிப்பதற்குள், நானும் வந்துவிட்டேன். வருகிறவழி யிலே கொஞ்சம்...

காளிதாஸன்—தாமதமோ ?

மதுசூதனர்—ஆமாம்! நீங்கள் தூது விட்டீர்களே அந்தப் பேர்வழி என்னைக் குறுக்கே வந்து மறித்து தொல்லை செய்ததால், கொஞ்சம் தாமதம்.

காளிதாஸன்—நான் உங்களுக்குத் தூது விடவில் லையே ஒருவரையும் !

மதுசூதனர்—நீங்கள் பூலோகத்தைவிட்டு வந்து நீண்டகாலமாகி விட்டதல்லவா? அதனல், அதன் சம்பந்தம் மறந்துபோய் விட்டதுபோலிருக்கிறது !

காளிதாஸன்—சரி ! சரி! சரி! இப்பொழுது தெரிந் தது. வருகிற வழியிலே, மழை பிடித்துக் கொண் டதோ ?

மதுசூதனர்—உங்கள் பழைய தூதுமேகம், முத லில் கையகலம் போல இருந்தது. திடீரென்று மழை பொழிந்து விட்டது. ஒரு சந்தேகம்?

காளிதாஸன்—என்ன சொல்லுங்கள் ?

மதுசூதனர்—காதலனுடைய காதலை காதலியிடம் தெரிவிப்பதற்காக, நீங்கள் மேகத்தை தூது அனுப்பி

னீர்களே, அப்படிச் செய்யலாமா? மேகம் நம்பிக்கைக்குப் பாத்திரமான பேர்வழியா?

காளிதாஸன்—ஏன் நம்பிக்கைக்கு பாத்திரமில்லை என்று சந்தேகப்படுகிறீர்கள்?

மதுசூதனர்—மேகம் எந்த இடத்திலும் மழையாகப் பொழிந்துவிடுமே! குறிப்பிட்ட இடம் போய்ச் சேராதே! அப்படியிருக்க, உங்கள் செய்தி, எப்படிப் போய்ச் சேரும்?

காளிதாஸன்—குளிர்ந்த இடத்திலே, மேகம் மழையாக மாறுவது இயற்கை, காதல் செய்தியை சுமந்து செல்லும் மேகம் தாபம்கண்ட இடத்தில்தான் செய்தி மழையைப் பொழியும் (சிரிக்கிறார்கள்)

மதுசூதனர்—அப்படியா? முன் காலத்துக்கும் இப்பொழுதுக்கும் உள்ள வித்தியாசங்களைப் பார்த்தால், விநோதமா யிருக்கிறது.

காளிதாஸன்—எல்லாவற்றிலும் மாறுபாடுகள் இருக்கின்றன. காலத்துக்குத் தக்கபடி மாறுதல்கள் உண்டாவது இயற்கைதானே?

மதுசூதனர்—காலத்துக்குத் தக்கபடி என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். ஆனால், காலம் மாறுகிறது என்பதற்குத்தான், அர்த்தம் தெரியவில்லை.

காளிதாஸன்—வாஸ்தவம்தான்! காலம் என்பது தனி வஸ்து அல்ல. மனிதர்களின் மனோநிலைமை மாறுவதற்கு, சம்பிரதாயமாய் காலம் என்று பெயர் அழைக்கிறார்கள்.

மதுசூதனர்—இப்படிச் சொல்வது தான் பொருத்தமாகும், உண்மையுமாகும். காலம் என்ற ஒன்றை ஒப்புக்கொண்டால், காலம் வரணும் காலம் போகணும் என்று மனிதர்கள் முயற்சியில்லாமல், சோம்பிக் கிடப்பார்கள்.

காளிதாஸன்—முயற்சி, முயற்சி என்று மனிதர்கள் பெருமையாகப் பேசிக்கொள்கிறார்களே அதனு

லேயா பெரிய மாறுதல்களும் சம்பவங்களும் ஏற்படு கின்றன?

மதுசூதனர்—ஆமாம் என்பதுதான் என் கருத்து.

காளிதாஸன்—மனித முயற்சியால் தீமைதான் அதிகமாக உண்டாகிறது. நன்மை ஏற்படுவதாக தோன்றவில்லை.

மதுசூதனர்—தீமையாவது நேருகிறதல்லவா? அதுவே போதும். பிறகு தீமையை நன்மையாக மாற்றிக் கொள்ளலாமல்லவா ?

காளிதாஸன்—உள்ளம் நைந்து நைந்து நோவது தான் பூலோகத்திலே பிறந்ததன் பயனே என்று எண்ணும்படியாக, பல நிகழ்ச்சிகள் என் பூலோக வாழ்க்கையில் நேர்ந்திருக்கின்றன.

மதுசூதனர் — அதற்காக நீங்கள் வருந்தின துண்டா?

காளிதாஸன்—விஷயம் ஒன்றுமே தெரியாதவன் தன்னை பண்டிதன் என்று சொல்லிக் கொள்கிறான், தும்மல் சத்தத்தைக் கேட்டு உடல் நடுங்குபவன் வீரன் என்று விருது கூறிக்கொள்கிறான், பார்வையிலே சாதுவாக இருக்கிறான். நடத்தையிலே மிகப் பாவி யாயிருக்கிறான். பூலோகத்திலே படாடோபம் தான் ரொம்பவும் அதிகமாயிருக்கிறது.

மதுசூதனர்—அப்படியானல்...?

காளிதாஸன்—காதல்தான் உள்ளத்திலே இயல் பாக ஊறும் உணர்ச்சி. அந்தக் காதலைத் தாங்கும் பாத்திரமோ பலவீனமாயிருக்கிறது.

மதுசூதனர்—எப்படி ? காதல் என்பது இயற்கை யான உணர்ச்சிதான்.

காளிதாஸன்—மனிதர்கள் காதல் உணர்ச்சியை தாங்கமுடியாமல் நாசமாகி வருகிறார்களே, அது உங் கள் கண்ணில் படவில்லையா?

மதுசூதனர்—நாசமாகி வருகிறார்கள் என்பதை ஒருவாறு நான் ஒப்புக்கொள்கிறேன். காதலை தாங்க மாட்டாமல் நாசமாகிறார்கள் என்று எவ்வாறு சொல்ல முடியும்?

காளிதாஸன்—காதல் என்பது ஒரு அழியாத தீ, அந்தத் தீயை மனிதர்கள் தரிக்க முடியாமல் அதாவது அதை உபயோகித்துக் கொள்ள முடியாமல், மரித்துப் போகிறார்களே!

மதுசூதனர்—காதலை, காமமாகப் பாவித்து, மனிதர்கள் சீரழிந்து போகிறார்கள் என்பது உண்மை.

காளிதாஸன் — போஜராஜனுக்கும் எனக்கும், இடையே இருந்தது காதல். அந்தக் காதலை அவன் அகம்பாவமாக மாற்றிக்கொண்டான், அவனால் காதலை தாங்க முடியவில்லை. ஆகவே என்னிடம் கோபம் கொண்டான்.

மதுசூதனர்—ஆமாம்!

காளிதாஸன்—எங்கள் இருவருக்கு மிடையே இருந்தது கவிதைக் காதல். அதை அவன் கள்ளக் காதலாகச் செய்துகொண்டு, கோபம் கொண்டான். எனக்கு என் தாசியிடமிருந்தது உயிர்க் காதல். அதை அவள் காமமாக மதித்து விட்டாள்.

மதுசூதனர்—அவள் அரசனுடைய வெகுமதிக்காக உங்களைக் கொன்றது மிகவும் பயங்கரமான செயல். மிகவும் கொடுமைக் கொண்டது.

காளிதாஸன்—காளிதாஸன் என்றால் உடல் இன்பத்துக்கு வேறுவகையில் தேவையான பணத்தை நாடி என்னைக் கொன்றாள்.

மதுசூதனர்—என்ன உலகம்!

காளிதாஸன்—மகத்தான சக்தியான காதலை மெல்லிய மனிதர் உடல்கள் பெரும்பாலும் தாங்க முடியவில்லை. ஆதலால் மனிதர்கள், காதலை வேறொரு பொருளாக மாற்றிக்கொண்டு.............................

என்று சொல்லிக்கொண்டு, மனதுக்கு சமாதானத்தை தேடிக்கொள்கிருர்கள்.

மதுசூதனர்—சகுந்தலையின் காதல் எத்தன்மை கொண்டது?

காளிதாஸன்—மிகவும் தூய்மை கொண்டது. ஆனல்...............

மதுசூதனர்—துஷ்யந்த ராஜன் அதை காமமாக மாற்றிக்கொண்டு, மனம் தடுமாறிப் போனுன். காதல் என்பது தன்னலமறியாத உணர்ச்சி. அதை எப்படியோ மனிதன் சுயநலமாக மாற்றிக் கொள்ளுகிருன். இது ஒரு அதிசயமல்லவா?

காளிதாஸன்—நீரின் தன்மையும் ருசியும், அது தேங்குகிற மண்ணைப் பெரும்பாலும் பொறுத்திருக்கிறது. அதைப்போல பலவீனமான மனித பாண்டத்தில் காதல் அகப்பட்டுக் கொண்டால், அது தவித்து, தத்தளித்து, உயிரும் உருவும் மாறித்தான் போகும்.

மதுசூதனர்—காதல் இல்லாமல் உலகம் இருக்க முடியாதா?

காளிதாஸன்—காதல் இல்லாமலும் முடியாது; கவிதை இல்லாமலும் முடியாது. நாடகம் இல்லாமலும் முடியாது.

மதுசூதனர்—காதலோடும் கவிதையோடும் நாடகத்தையும் சேர்த்துச் சொல்லலாமா?

காளிதாஸன்—நாடகம் என்பது என்ன என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

மதுசூதனர்—நாடகம் என்பதை நாடகம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

(சிரிக்கிருர்கள்.)

காளிதாஸன்—உங்களை அந்த மாதிரி கேள்வி கேட்டது தவறு. தயைசெய்து மன்னிக்க வேண்டுகின்றேன். காதல் கவிதை, இவைகளோடு நாடகத்தைச் சேர்க்க

லாகாது என்றீர்களே. அதனாலே, வார்த்தையோடு வார்த்தையாக அப்படி கேள்வி கேட்டு விட்டேன்.

மதுசூதனர்—அதனால் பாதகமில்லை. நீங்கள் சொல்ல வந்ததைச் சொல்லுங்கள். நான் அடி எடுத்துக் கொடுக்கட்டுமா? நாடகம் என்பது......

காளிதாஸன்—அதைத் துவக்கினதைப் போல, அழகாக முடித்து விடுங்கள். எனக்கு சிரமம் குறையும். அசட்டுத்தனமாக நடுவிலே, கேள்வியும் கேட்கமாட்டேன்.

மதுசூதனர்—ஆரம்பம் தான் எனக்கு ஆசை. முடிவு ஒருநாளும் பிடிக்கிறதில்லை.

(சிரிக்கிறார்கள்)

காளிதாஸன்—வாஸ்தவம் உங்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே பிடிக்காது தான். காதலாக தோன்றுகிற ஒரு உணர்ச்சி முடிவிலே, எப்படி யெப்படியோ மாறிப்போகிறதல்லவா? காதல் சாதலாக முடிகிறது.

மதுசூதனன்—மன்னிக்கவும், நீங்கள், நாடகம் என்பது என்ன என்று பதட்டமாகக் கேட்டது போல, நான் தவறாக எண்ணி விட்டேன். ஒவ்வொரு உணர்ச்சியும் செயலளவிலே உருவும் தன்மையும் மாறிப்போகிற விசித்திரம் தான் நாடகம் என்று அப்பொழுதே நான் சொல்லியிருக்கக் கூடாதா?

காளிதாஸன்—இதைச் சொல்லுவதற்காகத் தான் வாயெடுத்து, அப்பொழுது, துடுக்காகக் கேட்டது போல கேள்வி கேட்டுவிட்டேன்.

மதுசூதனன்—அதனால் என்ன? மேலே சொல்லுங்கள்.

காளிதாஸன்—மனிதர்கள், தேவர்கள், அசுரர்கள், அரக்கர்கள்—யாரை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். எல்லாருடைய ஹிருதயத்திலும் நடமாடுவது இரண்டே இரண்டுதான். காதல் என்பது

பெரு வெள்ள உணர்ச்சி; அகண்டமான தீ உணர்ச்சி என்றாலும் சரி. காதல் என்பது ஓட்டம், கவிதை என்பது எங்கும் பரிணமித்து நிற்கும் ஆகாசம். இவை இரண்டும்தான் இயங்குகின்றன.

மதுசூதனர்—இப்படி நாம் பேசிக்கொண்டே போனால், பாஷை என்பது நமக்கு இல்லையாக்கும் என்று சாமான்யர்கள் எண்ணிக்கொண்டு விடமாட்டார்களா? அவர்களுடைய மனதிலும் படும்படியாக, பேசினால் நீங்கள் சொல்லும் உண்மை எங்கும் பரவுமல்லவா?

காளிதாஸன்—நீங்கள் சொல்லுகிறது நிஜம் தான். நான் தெளிவாக சொல்லப் பார்க்கிறேன். காதல் என்பதை சித்திரமாக பாவித்துக் கொள்ளுவோம். கவிதை என்பதை சுவராக எண்ணிக்கொண்டால், சித்திரம் சுவரில் இருக்குமல்லவா? அப்பொழுது எவ்வளவு அழகாயிருக்கும்!

மதுசூதனர்—ஆமாம்!

காளிதாஸன்—காதல் என்ற ஓட்டம், வெள்ளம், கவிதை என்ற பிரம்மாண்டமான சமுத்திரத்தில் கலக்க எத்தனிக்கையில் விகற்பங்கள் நேர்ந்து அவைகளை நாடகமாகச் செய்துவிடுகின்றது.

மதுசூதனர்—இப்பொழுதும் விளங்காதோ என்று சந்தேகப்படுகிறேன்.

காளிதாஸன்—உங்களுக்கு விளங்கிற்று அல்லவா? என்னைக் காட்டிலும் தெளிவாக நீங்கள் சொல்லப் பாருங்கள் பலிக்கிறதா, பார்ப்போம்.

மதுசூதனர்-நல்லது, ஒட்டிக்கொள்ளுகிற சக்திக்கு காதல் என்று பெயர், இல்லையா?

காளிதாஸன்—ஆமாம்! தான் என்ற நினைப்பும் உணர்ச்சியும் இல்லாமல் ஒட்டிக் கொள்ளும் சக்தி காதல்.

மதுசூதனர்—ஒட்டிக்கொள்ளும் இரண்டு பொருள்கள், அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்குமா? அவைகளுக்கு தங்குமிடம் வேண்டாமா?

காளிதாஸன்—கண்டிப்பாய் வேண்டும். அந்தத் தங்குமிடம் தான் கவிதை. சரியாய்க் கொண்டுவந்து சேர்த்தீர்கள்,

மதுசூதனர்—அழகு, ஒழுங்கு, சீர், ஆனந்தம், தெவிட்டாத தன்மை, உண்மை முதலிய சேர்மானங்கள் சேர்ந்ததைத் தானே கவிதை என்று சொல்ல வேண்டும்?

காளிதாஸன்—காதல் என்பதை சொல் என்ற கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, வர்ணனை செய்து, விளக்கம் செய்துவிடலாம். கவிதை என்பதை கற்பனையால், உணர்வால்தான் கண்டுகொள்ள முடியும். இன்னதுதான் கவிதை என்று எல்லோரும் சுலபமாக அறிந்துகொள்ள முடியும், உணர முடியும்.

மதுசூதனர்—காதலும் கவிதையும் தன்மை மாறிப் போனால், அப்பொழுது எல்லாம் நாடகமாகி விடுகிறது. நாடகம் நடிப்புத்தானே?

காளிதாஸன்—தூய்மையான வாழ்க்கைக்கு வெள்ளை நிறத்தை உபமானமாகச் சொல்லுகிறார்கள். வெள்ளை நிறம் மாறினால், பல வர்ணங்கள் தோன்றுகின்றன, அதைப்போல, காதல் என்பது கவிதையோடு கலக்க எத்தனிக்கையில், அதனின்று மாற்சரியம் அகம்பாவம், துரோகம், தியாகம் வீரம் முதலிய நல்ல தன்மைகளும் கெட்ட தன்மைகளும் வெளிப்படுகின்றன.

மதுசூதனர்—இவ்வாறு வெளிப்படுபவைகளைத் தான், நாம் நாடகம் என்று சொல்லுகிறோம் இல்லையா?

காளிதாஸன்—ஆமாம்! நிறங்களை சேர்த்து அமைப்பதினால் அழகு தோன்றுகிறது. நாடகம் ரம்யமாயிருக்க வேண்டுமானால், நடைமுதல் நிகழ்ச்சிகளோடு கொஞ்சம் கற்பனையையும் கலக்கவேண்டும், சம்பவங்களை

வரிசைக்கிரமாக தொகுத்து எழுதினுல் அது சரித்திர மாகிறது. சம்பவங்களே வர்ணம் தீட்டி மோத விட்டால் அது தான் நாடகம்.

. . மதுசூதனர்—உயர்ந்த நாடகம் எல்லாராலும் எழுத முடியுமா?

காளிதாஸன்—சந்தேகம்.

சத்திரபதி ஸிவாஜி–பாஜி பிரபு

ஸிவாஜியின் தலைமையில், மகாராஷ்டிர சாம்ராஜ்யம் தோன்றியது சரித்திரம். சத்திரபதி ஸிவாஜியின் குணாதிசயங்களை, சரித்திரத்தில், வெகுவாகக் காணலாம். ஸிவாஜி, தன்னளவிலே, நிகரில்லாத வீரன். என்றாலும், அவருக்கு பக்கபலமாயிருந்த தோழர்களின் வல்லமையை விரித்துச்சொல்லுதல், இப்பொழுது முடியாத வேலை.

ஸிவாஜிக்கு இரும்புத் தூண்களைப் போல அசைக்கமுடியாத, ஆட்டங் கொள்ளாத துணைவர்களுள் சிறந்தவர்கள் மோரே பண்ட், நெட்டோஜி பல்கார், டாணாஜி மல்ஸுரே, பாஜி தேஷ்பாண்டே முதலியவர்கள். இவர்களுள் பாஜி தேஷ்பாண்டே என்ற பாஜிப்ரபு 1660 ஆம் ஜூலை மீ ஸிவாஜிக்கு, சொல்லுவதற்கு அருமையான சேவை செய்தார். சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அத்தகைய தீரத் தியாகத்தைச் செய்தார் பாஜி.

1660 வருஷம் பஸுல்கான், ஸிட்டி ஜோகர் என்ற வீரர்களான முஸ்லிம் சேனாதிபதிகள் திரண்ட சேனையைக்கொண்டு, ஸிவாஜியை பனலா என்ற இடத்தில் வளைத்துக் கொண்டார்கள். தனது 'விதிப்பூச்சி மாண்டது என்று ஸிவாஜி அனேகமாக, மனதில் தீர்மானித்துக்கொண்டார். இருந்தாலும், கடைசியாக, ஒரு உபாயம் செய்துபார்க்கலாம் என்று மனம் துணிந்தார்.

பனுலாவை ஸிட்டி ஜோகர் அவர்களிடம் கொடுத்துவிடுவதாக ராஜி பேசி, உஷாராக இருக்க வேண்டிய நிலைமை தேவையில்லை என்ற எண்ணத்தை, ஸிவாஜி எதிரிகளிடையே உண்டாக்கிவிட்டு. நடுநிசியில் பனுலாவைவிட்டு, பாய்ந்தோடிப் போனுர். நெடுந்தூரம் ஸிவாஜி போன பிறகு, அவரது தந்திரம் எதிரிகளுக்குப் புலனுயிற்று. துரத்தினுர்கள். விசால்காட் என்ற கோட்டைக்கு ஐந்து, மைல் தூரத்தில் ஸிவாஜியைக் க்ண்டார்கள். மீண்டும் வளைத்துக்கொண்டார்கள்.

இந்தத் தடவை அதோகதிதான் என்று மனதில் எண்ணிக் கொண்டார் ஸிவாஜி. தானும் பெரும்பகுதி சேனையும் விசால்காட் கோட்டைக்குத் தப்பிப் போக வேண்டுமானுல், ஒரே ஒரு உபாயம்தான் உண்டு என்று முடிவுக்கு வந்தார். அதாவது நம்பிக்கையான ஒரு தளபதியிடம் சிறிய சேனையை ஒப்படைத்து எதிரியின் தாக்குதலை தாங்கும்படி செய்தால், நேரம் கடத்தி, அந்த நேரத்துக்குள் விசால்காட்டுக்குத் தப்பியோடி விடலாம் என்பதுதான் அந்த உபாயம்.

இந்த உபாயத்தை, சாகஸத்தோடு நிறைவேற்றக் கூடியவர் பாஜிப்ரபு என்று ஸிவாஜிக்குத் தோன்றிற்று. ஸிவாஜியின் கருத்து கைகூடிற்று. ஆனுல், அந்தப் பெரு முயற்சியில், பாஜிப்ரபு, ட்ரபால்கர் கடல் சண்டையில் லார்ட் நெல்ஸன் தனது உயிரை இழந்தும் வெற்றி பெற்றதுபோல, தன் உயிரை இழந்து, வெற்றி பெற்ருர். ஸிவாஜி விசால்காட் போய்ச் சேர்ந்ததற்கு அடையாளமாக விடப்பட்ட ஐந்து வேட்டுகளைக் கேட்ட பின்னரே, பாஜி உயிர் துறந்தார்.

இந்த சம்பவத்துக்குப் பின்னர், ஸிவாஜி, பாஜியை உயிரோடு பார்க்கவில்லை. சொர்க்கத்தில்தான் சந்தித்தார். சொர்க்கத்தில், இப்பொழுது நடக்கப்போகிற சம்பாஷணை, பாஜியின் தியாகத்தைப் பற்றித்தான், இதோ பேசுகிறவர் ஸிவாஜி.

ஸிவாஜி—நெட்டோஜி! வா. ரொம்ப காலமாச்சு. உன்னைப் பார்த்து.

நெட்டோஜி—சத்திரபதி! ஆமாம்!

ஸிவாஜி—சொர்க்கத்தில்கூடவா நான் சத்திரபதி?

நெட்டோஜி—எங்களுக்கு அதைப் பற்றி சந்தேகமே கிடையாது.

ஸிவாஜி—உங்கள் விலாசத்தைப் போற்றுகிறேன், அதைப்போலவே, உங்கள் விவேகத்தை, நான் போற்றமுடியாது. (சிரிக்கிறார்)

நெட்டோஜி—விசுவாசம் இருக்கிற பொழுது, விவேகம் தேவையில்லை. அதைத்தான், நான் சற்று முன் டாணாஜியுடன் பேசிக்கொண்டிருந்தேன்.

ஸிவாஜி—எங்கே டாணாஜி? காணோமே?

நெட்டோஜி—அவனும் பாஜிப்ரவும் பேசிக்கொண்டு வருகிறார்கள்.

ஸிவாஜி—யாரோடு? நமது அருமை பாஜியோடா?

நெட்டோ—ஆமாம்! அவர்கள் இருவரும் சத்திரபதியின் தரிசனத்துக்காக வருகிறார்கள் என்பதை தெரிவிப்பதற்கு, நான் முன்னே வந்தேன்.

ஸிவாஜி—தரிசனமாவது! ராம்தாஸ் போன்ற சாதுக்களை தரிசனம் செய்தாலும், மனத்தில் இருக்கும் அழுக்குகள் விலகும். என்னைப்போன்ற பேராசைக்காரனைத் தரிசனம் செய்யவாவது?

நெட்டோஜி—சத்திரபதி வாயினின்றும் பேராசைக்காரன் என்ற சப்தம் வந்தால், அதை நாங்கள் கேட்க சகிக்கமாட்டோம். இதோ வந்துவிட்டார்கள் டாணாஜியும், பாஜியும்.

ஸிவாஜி—டாணாஜி! வா.

டாணாஜி—சத்திரபதிக்கு அடியேனுடைய சாஷ்டாங்க நமஸ்காரம்.

ஸிவாஜி—என் கண்ணான பாஜி! வா.

பாஜி—சத்திரபதி!

ஸிவாஜி—நெட்டோஜி! உங்களுக்கு எல்லாருக்கும் பைத்தியம் பிடித்திருக்கிறது. அல்லது, சத்திரபதி என்று என்னைக் கூப்பிட ஒத்துப் பேசிக்கொண்டு வந்

தீர்களா? பேராசைக்காரனைப் பார்த்து, சத்திரபதி என்று நீங்கள் கூப்பிடலாமா?

டாணுஜி—சத்திரபதி, இந்த மாதிரி பேசினுல், எங்களுடைய மனம் வெகுவாக புண்பட்டுப் போகும்.

ஸிவாஜி—இப்பொழுதுதான் நெட்டோஜியிடம் சொல்லிக்கொண்டிருந்தேன், நீங்கள் எல்லோரும் விவேகத்தைப் பறிகொடுத்த விசுவாச மூட்டைகள் என்று.

பாஜி—எங்களுக்கு விவேகம் தேவையில்லை. சத்திரபதியிடம் விசுவாசம் மட்டும் இருந்தால் போதும்.

ஸிவாஜி—உன்னை, என் மனமறிந்து காவு கொடுத்தேனே, அது உனக்கு நினைவில்லையா? அதை அடியோடு மறந்துவிட்டாயா?

பாஜி—என்னமாய் மறக்கும்?

ஸிவாஜி—என் பேராசையாலும் சுயநலத்தாலும் தானே, உன்னை உயிர்க்கொலை காவு கொடுத்தேன்.

டாணுஜி—சொர்க்கத்துக்கு வந்தபின், சத்திரபதிக்கு, குருக்ஷேத்திரத்தில் வில்விஜயனுக்கு ஏற்பட்ட சந்தேகத்தைப்போல, சந்தேகம் உண்டாகிவிட்டதா? அப்படியானுல், இந்த சொர்க்கம், சத்திரபதிக்கும் வேண்டாம், எங்களுக்கும் வேண்டாம்.

ஸிவாஜி—அப்பொழுது போலவே இப்பொழுதும், டாணுஜி செல்லக் குழந்தையைப்போல, சலுகையுடன் பேசுகிருன்.

டாணுஜி—சத்திரபதிக்கு முன்னே, நான் குழந்தை. சத்திரபதியின் எதிரிகளுக்கு முன்னே நான் முதுகு காண்பிக்காத வீரன்.

நெட்டோஜி—சபாஷ்! டாணுஜி!

ஸிவாஜி—நொய் அரிசி கொதி பொறுக்காது என்பதுபோல நீங்கள் இருவரும் அலட்டிவிட்டீர்கள். என்

றும்போல, பாஜி மௌனமாய்த்தான் இருக்கிருன். பாஜி! இவர்கள் பிதற்றுவதை நீ ஒப்புக்கொள்கிருயா?

பாஜி—அவர்கள் பிதற்றவில்லை. அவர்கள் சொல்லுவது, அப்படியே சத்தியம்.

ஸிவாஜி—நாம் எல்லாரும் எதிரிகளிடம் அகப்படாமல், விசால்காட்டை நோக்கி ஓடிக்கொண்டிருக்கையில், என்ன நடந்தது என்பது உங்களுக்கு நினைவு இருக்கிறதா?

டாஞ்ஞி—நன்ருக நினைவு இருக்கிறது.

ஸிவாஜி—விஸ்தாரமாகச் சொல்லு, பார்ப்போம்.

டாஞ்ஞி—பனுலாவை விட்டு, மகாராஷ்டிர வீரர்கள் தப்பியோடினுர்கள். இதைத் தெரிந்து கொண்ட வீரர்களான ஸிட்டிஜோகர், பஸுல் கான் திரண்ட சேனையோடு, நம்மைத் துரத்தி வந்தார்கள். விசால்காட்டுக்கு ஐந்துமைல் தூரத்திலிருக்கும் பண்டாரேபாணிக்கு வந்து சேர்ந்தோம். அங்கே, நம்மை மூன்று பக்கங்களிலும் அவர்கள் வளைத்துக்கொண்டார்கள்.

ஸிவாஜி—ஆமாம்! அப்புறம்?

டாஞ்ஞி—சத்திரபதி ஜன்னல் என்ற ஒரே ஒரு பாதை வழியாகத்தான் விசால்காட்டுக்கு தப்பிப் போகமுடியும். ஆனுல் எதிரிகள், ஆத்திரத்துடனும் துணிவுடனும் தாக்கி முன்னேறி வந்தார்கள்.

ஸிவாஜி—அப்பொழுது?

டாஞ்ஞி—எதிரிகளின் தாக்குதலைத் தாங்கி நிற்கும் சிலர் முன்வந்தாலொழிய, பெரும்பகுதி சேனை விசால்காட்டுக்கு தப்பிப் போக முடியாது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

ஸிவாஜி—ஆமாம், சரி. பிறகு?

டாஞ்ஞி—என்னைப் பார்த்து சில வார்த்தைகள் சொன்னீர்கள்.

ஸிவாஜி—என்ன சொன்னேன்?

டாணுஜி—டாணுஜி! பெரும் பகுதி மகாராஷ்டிர சேனே தப்பி விசால்காட்டுக்குப் போகவேண்டும். எதிரியைத் தாக்கி, அவர்கள் முன்னேறும் வேகத்தைத் தடுத்து சிறிது காலம் நுழை வழியைக் காப்பாற்ற வேண்டும். அந்த வேலேக்கு, உனக்கு எத்தனே மாவலி வீரர்கள் வேண்டும் என்று கேட்டீர்கள்.

ஸிவாஜி—நீ என்ன சொன்னுய்?

டாணுஜி—பதினுயிரம் வீரர்கள் தேவை என்றேன். நீங்கள் உடனே 'களுக்'கென்று சிரித்து விட்டு, பாஜிப்ரபுவின் முகத்தைப் பார்த்தீர்கள்.

ஸிவாஜி—நான் அப்போது ஒன்றும் சொல்லவில்லேயா?

டாணுஜி—நம்மிடம் இருப்பது பதினேயாயிரம் வீரர்கள் அவர்களில் பதினுயிரம் பேர்களே உன்னிடம் கொடுத்து விட்டு, விசால்காட்டுக்குப் போனுல் அந்தக் கோட்டையை ஐயாயிரம் வீரர்களேக்கொண்டு காக்க முடியுமா,' என்று கேட்டீர்கள். எனக்கு வெட்கமாய் போய்விட்டது.

ஸிவாஜி—பிறகு என்ன நடந்தது?

டாணுஜி—அப்பொழுதுதான், 'பாஜி என்ன சொல்லுகிருன்' என்று பாஜிப்பிரபுவின் முகத்தைப் பார்த்தீர்கள்.

ஸிவாஜி—பாஜி என்ன சொன்னுன்?

டாணுஜி—சத்திரபதிக்கு உசிதம் என்று தோன்றுகிற வீரர்களே விட்டுவிட்டுப் போனுல், சத்திரபதியின் கட்டளேயை நிறைவேற்றி வைக்கிறேன் என்று பாஜி சொன்னுர். அப்படியே செய்தும் காண்பித்தார்.

ஸிவாஜி—பிறகு?

டாணுஜி—பாஜி உனது பாக்கியமே பாக்கியம். உனது பெருமையே பெருமை. நீ போர்க்களத்தில் இறந்தாயானுல், விந்திய மலேக்குத் தெற்கேயிருக்கும் பிராந்திய முழுதும் பார்த்து பிரமிக்கும்படியாக

லட்சக்கணக்கான சந்தனக் கட்டைகளைக் கொண்டு மலையுச்சியில் உனக்கு சிதை அமைத்து அதற்கு தீ மூட்டுகிறேன் என்று நான் சொன்னேன்.

சிவாஜி—நீ ஏன் அவ்வாறு சொன்னாய்?

டானாஜி—சத்திரபதி ஒதுக்கிவிட்டுப் போகும் வீரர்களைக்கொண்டு, பாஜி தேஷ்பாண்டே சத்திர பதியின் கட்டளையை நிவைவேற்ற வேண்டுமானால், அவர் கண்டிப்பாய் உயிர் துறக்க நேரும் என்று எனக்குப் பட்டது.

ஸிவாஜி—நீ எண்ணினதுபோலவே ஆகிவிட்டது. நான் பேராசைக்காரனாயும் சுயநலக்காரனாயும் இருந்த படியினால் தானே பாஜிக்கு அந்த வேலையைக் கொடுத்தேன்.

பாஜி—சத்திரபதி அவ்வாறு வாய்கோணிச் சொல்லலாகாது. சந்திரராவ் மோரேயோடு சேர்ந்து கொண்டு, தங்களுக்கு விரோதமாக, நான் சண்டை போட்ட காலத்தில், தங்களை "பேராசைக்காரக் கொள்ளைத் தலைவன்" என்று நான் எண்ணினதுண்டு. அந்த அபத்தமான எண்ணத்துக்கு பிராயச்சித்தம் செய்வதைப்போல, தங்களுக்கு சேவைசெய்ய சந்தர்ப்பம் வாய்க்குமா என்று காத்துக்கொண்டேயிருந்தேன்.

ஸிவாஜி—டானாஜி! நான் பேராசைக்காரன் என்று நான் சொல்லும்பொழுது உங்களுக்கு வருத்தம் உண்டாயிற்றே, ஜனங்கள் துவக்கத்தில் என்னைப் பற்றி என்ன எண்ணிக்கொண்டிருந்தார்கள் என்பது பாஜி சொன்னதிலிருந்து, உங்களுக்குத் தெரிகிறதா?

டானாஜி! பாஜிகூட அப்படி எண்ணிக் கொண்டிருந்தார் என்று கேட்க எனக்கு ஆச்சர்யமாயிருக்கிறது.

சிவாஜி—மகா தீரனான பாஜியின் பேரில் பொறாமை கொண்டும் அவன் விசுவாசத்தில் சந்தேகம் கொண்டும் ஸிவாஜி பண்டாரே பாணியில் பாஜியை பலி கொடுத்து விட்டான் என்று பூலோகத்

தில், அந்தக் காலத்தில எத்தனே பேர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்களோ!

பாஜி—சத்திரபதி! எனக்கு அதிகமாகப் பேசத் தெரியாது என்று தங்களுக்குத் தெரியும். ஒரு வார்த்தை சொல்லுகிறேன் அதற்கு, தாங்கள் செவி சாய்க்க வேண்டும். அதைச் சொல்ல, இதுவரையிலும் எனக்கு சந்தர்ப்பம் வாய்க்கவில்லே.

ஸிவாஜி—தாராளமாக மனதைவிட்டுச் சொல்லு. உனக்கு பயமிருக்காது என்று எனக்குத் தெரியும். ஆனுல் நீ மகாதீரன், தியாகி. ஆகையால், சில சங்கதிகளேச் சொல்ல, நீ கூச்சப்படலாம். அந்தக் கூச்சமும் இல்லாமல் சொல்லு,

பாஜி—தங்கள் பேராசைக்காக என்னேக் களபலி கொடுத்ததாக தாங்கள் சொன்னீர்களே, அதுதான் எனக்கு வீரசுவர்க்கம் கிடைத்ததற்கு அருமையான, கிடைப்பதற்கு அருமையான சந்தர்ப்பமாக எனக்கு வாய்த்தது. அதற்காக தங்களே இப்பொழுது வாயார வாழ்த்துகிறேன்.

டாஞ்ஜி—பாஜி! நீர் இருக்கையிலும் வீரன்! இறந்தும் வீரன்! ஆசையும் அகம்பாவமும் இல்லாத தனிப்பெரும் தியாகி நீர்தான்.

பாஜி—இந்த புகழ்மாலே எனக்கு எதற்காக? கடமையை செய்ததற்காகவா?

ஸிவாஜி—கடமை என்று சொல்லுகிருயே, அது எப்படி கடமை என்றுதான் நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன், பண்டாரே பாணியில் உனக்கு நான் கட்டளே இட்டது முதல் இதுவரையில், எனக்கு சந்தேகம்தான், நான் உன்னேக் கட்டளேயிட்டது சரியா இல்லேயா என்பதுதான் அந்த சந்தேகம்.

பாஜி—சத்திரபதி! பூலோகத்திலேயே, தங்களுக்கு அந்த சந்தேகம் வந்துவிட்டதா?

ஸிவாஜி—ஒருவாறு அப்பொழுது ஏற்பட்டது. இங்கு வந்த பிறகு, அது நிலைத்த ஒன்றாக மாறி விட்டது.

பாஜி—அப்படியானால், இது சொர்க்கமல்ல. இது சந்தேகம் பயிராகும் க்ஷேத்திரம். இந்த இடத்தில் இனியும் நாங்களும் சந்திரபதியும் ஒரு நிமிஷங் கூட இருக்கலாகாது.

ஸிவாஜி—பாஜி! பூலோகத்திலே, துணைவர்களின் விசுவாசத்தாலும் தோழர்களின் தியாகத்தாலும் எனக்கு எதிலும் சஞ்சலம் ஏற்பட்டதில்லை. ராம தாசின் உபதேசம், அன்னை ஜீஜி பாயின் விருப்பம், பவானியின் ஆக்ஞை இவைகள் எனக்கு சந்தேகத்தை உண்டாக்கினதே யில்லை.

பாஜி—அதுதான் சரியான முடிவு, சஞ்சலம் சத்திர பதிகளுக்கு லட்சணமல்ல. சந்தேகம் தன்னம்பிக்கை கொண்ட வீரர்களிடம் காணக்கூடிய ஒரு பொருளா?

ஸிவாஜி—நீ சொல்லுவது ஒருவாறு உண்மையே. மேலே சொன்னேனே. அந்தக் காரணங்களால் அகம் பாவம் அடைந்து பேராசைக்காரனாக ஆகி, தன் மயக்கம் கொண்டு, தர்மத்தின் பொருட்டு செய்கிறேன் என்று பூலோகத்தில் நான் பிதற்றிக்கொண்டிருந் தேனோ என்று சந்தேகம், என்னை இங்கே வாட்டி வதைக்கிறது,

பாஜி—சத்திரபதி! அதோ, ராம்தாஸ் சுவாமிகள் வருகிறாப்போல என் கண்ணுக்குப் படுகிறது.

ஸிவாஜி—எங்கே?

பாஜி—என் கண்ணுக்குத் தெரியவில்லையே! டானாஜி உனக்குத் தெரிகிறதா?

டானாஜி—அதோ வருகிறாரே!

ஸிவாஜி—நெட்டோஜி! உன் கண்ணுக்குத் தெரி கிறதா?

நெட்டோஜி—ஆம்! அதோ வருகிறாரே!

ஸிவாஜி—என்ன பாவியானேன்? சொர்க்கத்திலே பாவிகளுக்கு இடமேது?

பாஜி—தங்களுடைய வழக்கமான திடசங்கற்பம் மாயமாய் மறைந்து போய் அது இருந்த இடத்தை, சந்தேகம் என்ற உதவாக்கரையான ஒன்று ஆக்கிரமித்து, அதில் ஆட்சி புரியும் விசித்திரத்தால், ராம்தாஸ் சுவாமிகள் தங்கள் கண்ணில் படவில்லை போலிருக்கிறது.

டாணுஜி—அப்படித்தான் எனக்கும் தோன்றுகிறது.

நெட்டோஜி—ஆமாம்! எனக்கும் அப்படியே தோன்றுகிறது.

ஸிவாஜி—உங்களுக்கெல்லாருக்கும் என் பேரில் இருக்கும் எல்லையில்லாத விசுவாசத்தின் காரணமாக யோசிக்கிற வேலையையே நிறுத்திவிட்டீர்கள்! ஆகவே தர்மத்தைப் பற்றியும் விரிவாக யோசிக்காமலே நின்றுவிட்டீர்கள். அன்றைக்கு பண்டாரே பாணியில் நான் சண்டை செய்திருக்க வேண்டும். எந்த லட்சியத்துக்காக நான் உழைப்பதாக எண்ணிக்கொண்டிருந்தேனோ, அது நான் உயிர் துறத்தலால் சிதறி வீணாய்ப் போயிருக்காது. எனக்குப் பின்னர் நீங்கள் அதே வேலையை, என்னைக் காட்டிலும் வெகு மும்முரமாயும் திறமையுடனும் செய்திருப்பீர்கள்.

பாஜி—முதன் முதலாக, இன்றைக்கு, தாங்கள் சொல்லுவது தவறு என்று ஆட்சேபிக்க, எனக்கு உத்தரவு கொடுங்கள்.

நக்கீரர்–
ஒட்டக்கூத்தர்

நக்கீரர், சங்கப்புலவர்களுள் ஒருவர். பரமசிவனுர் பாடிய பாட்டிலும் குற்றம் இருக்கிறது என்று சொல்லத் துணிந்தவர் நக்கீரர் என்பது உங்களுக்குத் தெரியும். ''நெற்றிக் கண்ணைத் திறப்பேன்'' என்று பரமசிவனுர் நக்கீரரை பயமுறுத்த, அப்பொழுதும், சிறிதும் தயங்காமல், ''பாட்டில் குற்றம் குற்றமே'' என்று அஞ்சாமல் பதில் சொன்னதும் உங்களுக்குத் தெரியும்.

குறிப்பிட்ட விதிகளை மீறினல், மீறினது யாராயிருந்தாலும், அரசனுயினும் சரியே, ஆண்டவனுயினும் சரியே குற்றவாளி தான் என்று தாட்சண்யமும் அச்சமுமின்றி சொல்லக்கூடிய தன்மை, அபூர்வமான தன்மையாகும். அப்படிச் சொல்லும் பொழுது சொல்லுகிறவர் அறிவின் அகம்பாவத்தால் சொல்லுகிருப்போல் தோன்றும், இந்தத் தோற்றத்தினுல் அவதிப்பட்டவர் நக்கீரர்.

நக்கீரர் ஒரு சிறிது அடக்கத்தோடு பதில் சொல்லியிருக்கலாம் என்று வர்த்தக புத்தியுடன் லாப நஷ்டக் கணக்குப் பார்ப்பவர்கள் நக்கீரரைப் போன்றவர்களுக்கு புத்தி கூற முன்வருவது உலக இயல்பு.

ஒட்டக்கூத்தன் குலோத்துங்க சோழன் காலத்தில் அந்த அரசனுக்கு வித்தை போதிக்கும் வித்வானுக அமைந்திருந்த பெரும் புலவர். நந்தனுரின் ஆண்டை

தனது சாஸ்திரப் பயிற்சியில் இறுமாப்புக் கொண்டு இயற்கையின் செல்வனுன நந்தனுரை அவமதித்தது போல, ஒட்டக்கூத்தன், தமது பெரும் புலமையின் காரணமாக, இயற்கைக் கவிகளை அவமதித்து வந்தார் அதற்காக பெரிதும் அவமானமும் அடைந்தார்.

புலவன் கல்விக் களஞ்சியமாக இருக்கலாம். அவன் கவிதையின் ஊற்ருக இருக்கவேண்டுமென்பதில்லை. தான் சேகரித்து வைத்திருக்கும் கல்வியினுல் கவிதைக்கும் அதிபனுகி விட்டான் என்று புலவன், பெரும்பாலும் எண்ணி ஏமாந்து போகிருன். இவ்வாறு ஏமாந்து போனவர்களுள் உச்சஸ்தானத்தில் இருப்பவர் ஒட்டக்கூத்தன். பிரமிக்கத்தக்க கவிதைப் பெருக்கைக் காண்பித்த புகழேந்தியிடம் பொருமை கொண்டு அவருக்குப் பலவகைகளிலும் ஒட்டக்கூத்தன் இன்னல் செய்தது எல்லோருக்கும் தெரிந்த சரித்திரம்.

நக்கீரரும் ஒட்டக்கூத்தனும் சொர்க்கத்தில் சந்தித்தால், என்னதான் பேசியிருப்பார்கள்? உலகத்தார் தங்கள் பேரில் சுமத்தி வரும் பழி சற்றேனும் அடாத பழி என்று விளக்கிச் சொல்லத்தான் விரும்புவார்கள். அதைப்பற்றிதான் பேசுகிருர்களா அல்லது வேறு எதையேனும் தாறுமாருக இப்பொழுதும் பேசுகிருர்களா என்பதை ஜாக்கிரதையுடன் கேட்குமாறு உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

முதலில் யார் பேசுவார் என்று உங்களுக்குத் தோன்றுகிறதோ, அவர்தான் கண்டிப்பாய்ப் பேசுவார். ஆம்; நக்கீரர்தான் முதலில் பேசுவார். இடையிலே சம்பாஷணையில் ஒரு பெண்மணி கலந்து கொள்ளுவார். அவர்தான் பாண்டிய மன்னனுடைய மகள். புகழேந்தியை சீதனமாகக் கொண்டுபோன சோழ ராஜனுடைய மனைவி. சம்பாஷணைக் காலத்தில் பெண்மணி அருகில் இருந்தால் அந்த சம்பாஷணை தொனி அலாதியாகவேதானிருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா?

நக்கீரர்—ஒட்டக்கூத்தரே! பூலோகத்தில் நான் எத்தனையோ விசித்திரங்களைப் பார்த்திருக்கிறேன். அவைகளுள் ஒன்றை மட்டும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

ஒட்டக்கூத்தன்—புலவர் பெருமானான நக்கீரரே! இன்றைக்கு நாம் இருவரும் சந்திப்பதில் பூலோகத்தில் சிறிது பரபரப்பு இருக்கும். ஆகா! இரண்டு இறுமாப்புக் கொண்டவர்களும் சேர்ந்து கொண்டார்களா என்று பதட்டமாய்ப் பேசினாலும் பேசுவார்கள்.

நக்கீரர்—இறுமாப்பு இது, அறிவினால் ஏற்பட்ட உறுதி இது என்று வேற்றுமை காண முடியாத மக்கள் என்ன பகடி செய்தால் என்ன? எவ்வளவு பதட்டமாய்ப் பேசினால் என்ன?

ஒட்டக்கூத்தன்—தங்களுடைய இந்த வாக்கியத்தைக் கேட்டதும், நக்கீரர் சொர்க்கத்திலும் பூலோகத்தில் பேசினது மாதிரிதான் பேசுகிறார், வித்தியாசத்தைக் காணோம், அப்படித்தான் இருக்க முடியும் என்று அப்பொழுதே நான் சொல்லவில்லையா? என்று ஒருவன் மார்தட்டிப் பேசினாலும் பேசுவான்.

நக்கீரர்—உலகத்தின் இயல்பு அதுதான். கல்லாத ஒருவன், முற்றும் கற்ற புலவனைப் போல் நடிப்பது என்று இயல்பு. வல்லான் வகுத்ததே வாய்க்கால் உலக ஞானம் பேசிக்கொண்டு, பூலோகத்தில் ஒவ்வொருவனும் தனது சொந்த சுதந்திரத்தை பறிகொடுத்துவிட்டு திண்டாடுகிறான்.

ஒட்டக்கூத்தன்—தங்களைப் போல துணிவு எல்லோருக்கும் வரும் என்று எதிர்பார்க்க முடியுமா?

நக்கீரர்—எல்லோருக்கும் எளிதிலே வரமுடியும். ஆனால் வராது என்று தங்களையே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள், ஆகவே முழு மூடர்களாகின்றார்கள்.

ஒட்டக்கூத்தன் — எல்லோருக்கும் அத்தகைய துணிவு ஏற்படும் என்று எவ்வாறு சொல்லமுடியும்?

நக்கீரர்—துணிவு எதனுலே ஏற்படுகிறது? முரட்டுத்தனத்தாலா?

ஒட்டக்கூத்தன்—இல்லை; தான் செய்யும் காரியம் அல்லது தான் நினைக்கும் நினைப்பு, தவறு இல்லாதது நன்மை விளைவிப்பது என்ற உணர்ச்சியால் மனிதனுக்கு துணிவு உண்டாகிறது.

நக்கீரர்—ஆமாம். தாங்கள் சொல்லுவது உண்மை. ஆகவே துணிவு எளிது.

ஒரு குரல்—அது முழு உண்மையல்ல. மனிதர்களுக்கு அறிவினுல் மட்டும்தான் துணிவு ஏற்படுகிறது என்பதல்ல. அன்பு என்ற ஒரு முரட்டுத் தனத்தாலும் துணிவு உண்டாகலாம்.

ஒட்டக்கூத்தன்—தங்கள் குரல், ரொம்பவும் நான் கேட்ட குரல்மாதிரி இருக்கிறதே! எங்கள் சோழ மன்னன் மனைவியின் குரல் மாதிரி இருக்கிறதே!

குரல்—ஆமாம்! நீர் எண்ணியது தவறல்ல, சோழ மன்னனின் மனைவியாக இருந்தவள்தான் நான். புகழேந்திப் புலவரை உங்கள் மன்னர் நாட்டுக்கு ஸ்ரீதனமாகக் கொண்டுவந்த பாண்டிய மன்னனுடைய மகளும் நான்தான்.

நக்கீரர்—அன்றைக்கு எனக்கும் பரமசிவனுருக்கும் மனவருத்தம் எற்பட்டது, ஒரு பெண்ணுலே. புகழேந்தியும் ஒட்டக்கூத்தரும் சந்தித்து சச்சரவிட்டுக் கொண்டதும் ஒரு பெண்ணுலே. (சிரிக்கிருர்.)

குரல்—அது எப்படி இருந்தாலும் இருக்கட்டும். அறிவினுல் மட்டும் துணிவு ஏற்படுகிறதா?

நக்கீரர்—ஒட்டக்கூத்தரே! எங்கள் பாண்டிய மன்னன் மகள் பேசுவதைப் பற்றி, தங்கள் கருத்து என்ன?

ஒட்டக்கூத்தன்—அன்பினுலும் துணிவு ஏற்படக் கூடும். ஏனென்ருல் இந்த அரசியின் அன்பினுல் புகழேந்திப் புலவருக்கு, துணிவு ஏற்பட்டதல்லவா?

குரல்—ஒட்டக்கூத்தரே! சொர்க்கத்துக்கு வந்து கூட, புகழேந்திப் புலவரை, தாங்கள் குறைத்துப் பேச வேண்டுமா? புகழேந்தியாரின் துணிவுக்கு, ஏன் அன்பு தேவையே இல்லை! அவர் இயற்கைக் கவி; ஆகவே இயற்கையாகவே துணிவாளர்.

நக்கீரர்—இயற்கைக் கவி, இயற்கை வீரன், இயற்கைச் சீமான், இயற்கை கனவான் என்று பல வாருகச் சொல்லி, பூலோகத்தில் முயற்சியையும் பயிற்சியையும் இழிவாகக் கருதி அவதூறு பேச கற்றுக் கொண்டிருககிருர்கள். அரசி! தங்களை நான் ஒன்று கேட்க வேண்டும்.

ஒட்டக்கூத்தன்—நானும் சிலவற்றைக் கேட்க வேண்டும்,

குரல்—இரண்டு பீரங்கிகளுக்கிடையே நான் அறியாமல் அகப்பட்டுக் கொண்டேனு?

நக்கீரர்—இரண்டு பீரங்கிகளுக்கிடையே அடி வைத்த துணிவு அவைகளிடம் அன்பினுல் ஏற்பட்ட துணிவு போலிருக்கிறது.

ஒட்டக்கூத்தன்—நல்ல சந்தர்ப்பத்தில், சரியான குண்டுப் பிரயோகம்! (சிரிக்கிருர்)

குரல்—புலவர்களே! நான், பீரங்கிகள் என்று வெறும் உவமானத்துக்குச் சொன்னேன். அதை அவ்வளவு பெரிதுபடுத்திப் பேசிவிட்டீர்களே! உங்களுள் பெரிய பீரங்கி யார்? (சிரிக்கிருள்)

நக்கீரர்—பூசலுக்குக் காரணம் பெண்தான் என்று நான் அப்பொழுதே சொன்னேனே? (சிரிக்கிருர்)

குரல்—நக்கீரரே! ஏதோ என்னைக் கேட்க வேண்டும் என்று சொன்னீர்களே!

நக்கீரர்—இயற்கைக் கவி என்றீர்களே, அதற்கு என்ன பொருள்? இயற்கை என்ருல் என்ன?

ஒட்டக்கூத்தன்—நக்கீரரே! தாங்கள் இப்பொழுது கேட்ட கேள்வி மிகவும் பொருத்தமானது. இயற்கைக் கவி என்றால் அரசீ! இலக்கணக் கட்டுப்பாடு, உலகத்தின் கட்டுப்பாடு முதலிய கட்டுப்பாடுகளை கவனிக்காமல், பாடுபவன் என்று பொருளா? இயற்கை வீரன், கண்ட பேர்களை, கண்ட விடங்களில், யாதொரு விதிக்கும் கட்டுப்படாமல் கொன்று வீழ்த்தி விடலாமே?

குரல்—அப்பொழுதே சொன்னேனே, இரண்டு பீரங்கிகளுக்கு நடுவில் நான் அகப்பட்டுக் கொண்டு விட்டேன் என்று. ஏதோ இந்தப் பக்கமாய்ப் போய்க் கொண்டிருந்த சமயத்தில் ஒட்டக்கூத்தரின் குரல் காதில் விழுந்தது. என்ன என்று பார்க்க வந்ததன் விபரீத விளைவுகள், நீங்கள் கேட்கும் கேள்விகள்.

நக்கீரர்—இயற்கை கவி என்றீர்களே அது என்ன என்று தான் கேட்டுத் தெரிந்துகொள்ள ஆவலுள்ளவனாய் இருக்கிறேன்,

குரல்—சாட்சிக்கு வந்தவர்களைக் கட்சிக்காரர்களாக்கும் கதையாக இது முடிந்து விட்டது. கூட்டில் ஏற்றி என்னை இலக்கிய விசாரணை செய்தால், அவ்வளவு என்னால் தாங்க முடியுமா? நீங்கள் இருவரும் பெரும் புலவர்கள். புலவர்களல்லாத சாதாரண மக்களின் பேச்சை நான் பேசிவிட்டேன், அதற்காக இவ்வளவு தண்டனையா? (சிரிப்பு)

நக்கீரர்—அரசீ! நீங்கள் இயற்கை என்று சொன்னதில் பொருள் இல்லாமல் இல்லை. அதிலே பொருள் நிறைந்திருக்கிறது. இயற்கை மணத்தைப் போல இயற்கைக் கவியும் உண்டு. அதில் சந்தேகமில்லை. ஆனால் எழுத்தறிவே இல்லாத ஒருவன் இயற்கை ஆவேசத்தால் கவி பாடுவதாகச் சொன்னால் அதை நம்ப முடியுமா? இந்தப் பொய்தான் இப்பொழுது பூலோகத்தில் மலிந்து வருகிறது.

குரல் நல்லவேளை, நான் தப்பினேன், இனி நீங்கள் இரண்டு பேரும் சம்பாஷணை செய்வதை அனுபவிப்பதுதான் என் ஆசை.

ஒட்டக்கூத்தன்—எங்கள் இருவருக்குள்ளும் அபிப்பிராய பேதமே இல்லை என்று சொல்லிவிடலாம். இயற்கை என்றும் மேதாவி என்றும் ஆவேசம் என்றும் புரளி செய்துகொண்டு சட்டதிட்டத்தை கேவலமாகக் கருதும் மனப்பான்மையை நாங்கள் கண்டித்தோமே யொழிய உண்மையான கவிதையில் எங்களுக்கு நம்பிக்கையும் ருசியும் இல்லையா? போலிகள் நடமாடலாகாது. நடமாட விடப்படாது என்பதுதான் எங்களுடைய தீர்க்க வைராக்கியம்.

நக்கீரர்—சட்டதிட்டம் என்று சொல்லி, நான் மறந்து போனதை தாங்கள் நினைப்பூட்டினீர்கள். துவக்கத்தில் சொன்னேனே, விசித்திரம் என்று அந்த விசித்திரம் சட்டதிட்டத்தைப் பற்றிதான்.

ஒட்டக்கூத்தன்—இயற்கை விதி, மனிதச் சட்டம் என்ற பாகுபாடுகளை உண்டாக்கி, இரண்டையும் ஒப்பிடுவதைப்போல பாவனை செய்து, மனிதச் சட்டத்தைப் பற்றி அவதூறு பேசுவது சிலரின் வேலையாக அமைந்து கிடக்கின்றது. அந்த விசித்திரத்தைத் தானே தாங்கள் சொல்ல வாயெடுத்தீர்கள்.

நக்கீரர்—ஆமாம்! வாழ்க்கையில் எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும், அந்தப் பகுதி சம்பந்தப்பட்டவரையிலும் அதற்கு தேவையும் பொருத்தமுமான சட்டமும் திட்டமும் இருக்கத்தானே வேண்டும்?

ஒட்டக்கூத்தன்— சட்டதிட்டம் இல்லாவிடில், ஒழுங்கு இருக்காது. ஒழுங்கும் முறையும் இல்லாமல் போனால், குழப்பம்தான்; குழப்பத்தின் நடுவே எதையும் செய்யமுடியாது. மேலும் குழப்பத்தால், உயிர் பரிமளிக்காமல் போய், சாவுதான் நிச்சயமாக உண்டாகக் கூடிய பயனாகும்.

நக்கீரர்—மனிதன் தனது தற்காப்புக்காகவும் முற்போக்குக்காகவும் சட்டத்தையும் திட்டத்தையும் அமைத்துக் கொள்கிறுன். எல்லோரும் ஒன்றுசேர்ந்து அமைத்துக்கொண்ட ஒன்றுக்கு எல்லோரும் மரியாதை செய்து, அதை கௌரவப்படுத்த வேண்டாமோ?

ஒட்டக்கூத்தன்—அப்படிச் செய்யாவிட்டால் வாழ்க்கை சீர்குலேந்து போய்விடாதா?

நக்கீரர்—இப்பேர்ப்பட்ட சட்ட திட்டத்தை கேவலமாகப் பேசத் துணிந்தால், அப்பொழுது என்ன செய்கிறது? சட்டத்தை மீறி நடந்தால், மீறி நடந்தவர்கள் யாராயிருந்தால் என்ன, அதைக் கண்டிக்காமல் இருக்க முடியுமா?

ஒட்டக்கூத்தர்—கண்டிக்கும் வேலேயை ஆச்சரியப்படும்படியான துணிவுடன், தாங்கள் செய்து காண்பித்துவிட்டீர்களே!

நக்கீரர்—சட்டம் என்ற ஒன்றைச் செய்துவிட்டு, 'நான் அரசன்; சட்டம் என்னே பாதிக்காது, கட்டுப்படுத்தாது' என்று ஒருவர் சொன்னுல், அதை எப்படி ஏற்கமுடியும்?

ஒட்டக்கூத்தர்— 'அரசனுக்குத் தேவையில்லாத சட்டம் எனக்கு எதற்கு? அரசன் எவ்வழியோ, அவ்வழி குடிமக்களுக்கு என்று எளியவன் ஒருவன் சொல்லுவானுகில், அதில் என்ன தவறு இருக்கிறது? (சிரிக்கிருர்கள்.)

குரல்—சட்டத்துக்கு மீறிய அரசன் இல்லே, இருக்க முடியாது.

நக்கீரர்—அதைப்போலவே, இயற்கையும் வாழ்க்கையும். இவையிரண்டும் சட்டத்துக்கு கட்டுப்பட்டவை. இதைப் போலவே, கவிதையும். கவிதை சில விதிகளுக்கும் லட்சணங்களுக்கும் கட்டுப்பட்ட

தாகும். அவைகளை மீறி, "இயற்கைக் கவிதை" பாடி விட்டேன் என்று யாராவது சொன்னால், அது சிரிக்கத் தக்க விஷயமல்லவா?

குரல்—உங்கள் இருவரையும் போல எனக்கு புலமையுமில்லை; பயிற்சியும் கிடையாது. ஆகவே, ஒரு சந்தேகத்தை தெரிந்துகொள்ளலாமோ?

ஒட்டக்கூத்தர்—அரசீ! எங்கள் புலமையை நீங்கள் கேலி செய்வதைப் போல பேசுகிறீர்கள்! அது உங்கள் பெருமைக்கு அழகல்ல.

நக்கீரர்—ஒட்டக்கூத்தரே! அரசி உண்மையிலேயே பகடி செய்ததாகவே இருக்கட்டுமே! நமது புலமையின் தன்மை உணராமையின், அரசியின் பகடி அதிலேபட்டு முனை முறிந்து போகாதா? அதைப்பற்றி நாம் ஏன் வருந்தவேண்டும்? அரசீ! தங்கள் சந்தேகத்தைச் சொல்லுங்கள்.

குரல்—நக்கீரரே! தாங்கள் பெரும்புலவர் என்பதில் சந்தேகமேயில்லை. பெரும்புலமையுடன் பெருந் தன்மையும் வாய்மையும் சேர்ந்து இருக்கும் என்பதை தாங்கள் ருசுப்படுத்திவிட்டீர்கள். உங்களுக்கு வணக்கம். என் சந்தேகத்தைச் சொல்லுகிறேன்.

நக்கீரர்—நல்லது! சொல்லுங்கள்.

குரல்—சட்டம் என்றும், திட்டம் என்றும் சொன்னீர்களே அவைகள் எப்பொழுதும் மாறாமல் இருப்பவைகளா? மாறும் தன்மையும் தேவையும் கொண்டவைகளா? காலத்துக்கேற்ற திட்டம் என்கிறார்களே, அது என்ன? சிறிது விளக்கமாகச் சொல்லவேண்டும்.

நக்கீரர்—சில சட்டங்கள் மாறாத தன்மை கொண்டவை. அவைகளை மாற்ற முடியாது. தீக்கு சுடும் தன்மை எவ்வாறு இயற்கையோ அவ்வாறே, வாழ்க்கைக்கு சில சட்டங்கள் பொருத்தமாகவும் அழகாக

வும் அமைந்து கிடக்கின்றன. அவற்றை மாற்ற முடியாது. மாற்ற முயன்றால், வாழ்க்கை சீர்குலைந்து சின்னபின்னப்பட்டுப் போகும்.

ஒட்டக்கூத்தர்—நக்கீரரே! அரசியின் சந்தேகம் வெடிமருந்தைப்போல, அது நம்மை தகர்த்துத் தீர்த்து விடப்போகிறது! முன் எச்சரிக்கையுடனிருப்பது நலம்.

நக்கீரர்—தகர்த்தெறியட்டுமே! அதற்கு பயந்து உண்மையை மறைத்து, அல்லது மறுத்துப் பேசுதல் கூடுமா? சட்டதிட்டத்தின் நோக்கமே, உண்மையைக் காணுதல்தானே?

குரல்—பெரும் புலவரே! மீண்டும் தங்களை வணங்குகிறேன். கவிதையில் போலி இருப்பதைப் போலவே, புலமையிலும் போலி இருக்கும் போலிருக்கிறது!

ஒட்டக்கூத்தர்—அரசீ! தாங்கள் இப்பொழுது பேசினது என்னைச் சுட்டிக்காட்டியா?

குரல்—அப்படியே வைத்துக் கொள்ளுங்களேன். உண்மையை மறைத்து, முன்எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று தாங்கள் குறிப்பிட்டது நேர்மையாகுமா?

நக்கீரர்—அரசியின் சந்தேகக் கேள்விகளை தெளிவு படுத்த வேண்டாமா?

ஒட்டக்கூத்தர்—ஆமாம்! அதிலே, தாங்கள் எதிர்பாராத ஆபத்து இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டதற்குத்தான், அரசி என்பேரில் காய்கிறார்.

நக்கீரர்—எனக்கு உண்மைதான் கண்ணில் படுகிறது. ஆபத்தைப்பற்றி கவலை இல்லை. இயற்கையாக வாழ்க்கையோடு பொருந்திக் கிடக்கும் சட்டத்தை

மாற்றமுடியாது. தாற்காலிக தேவைக்காக சில சட்டங்கள் தோன்றலாம். அவைகளை மாற்றித்தான் ஆக வேண்டும். மனிதர்களின் முற்போக்குக்குத் தகுந்தாற்போல திட்டமும் மாறும்.

குரல்—உண்மை, இந்த சட்டத்தையும் திட்டத்தையும் மாற்றவேண்டிய தேவையையும் வழியையும் உணர்த்தி வற்புறுத்துவதற்காக தோன்றுபவர்கள் தான் இயற்கைக் கவிகள், இயற்கை வீரர்கள்.

ஒட்டக்கூத்தன்—அப்பொழுதே சொன்னேனே அரசியின் சந்தேகம் வெடி மருந்தென்று! நக்கீரரே! நான் புகழேந்தியை இயற்கைக் கவி என்றும், தாங்கள் பரமசிவனுரை இயற்கை வீரன் என்றும் ஏற்றுக் கொள்ளவேண்டும்!

நக்கீரர்—அப்படியே இருக்கட்டுமே! அதற்காக, உண்மையை மறக்கமுடியாது.

குரல்—புலவர்களே! வணக்கம், போய்வருகிறேன்.

நக்கீரர்—பெண்கள் தான் உண்மையான புத்தி சாலிகள்.

ஒட்டக்கூத்தன்—மயக்கம்!

★

வ. ரா. (வ. ராமசாமி) 17–9–1889ல் தஞ்சை ஜில்லாவில் உள்ள திங்களூர் கிராமத்தில் பிறந்தார். திருவையாறு உயர்நிலை பள்ளியில் மெட்ரிகுலேஷன் தேறி செயின்ட் பீட்டர்ஸ் காலேஜிலும் பிறகு எஸ்.பி.ஜி. காலேஜிலும் எப்.ஏ. படித்தும் இருதடவையும் தேறவில்லை. கல்கத்தாவுக்கு சுரேந்திரநாத் பானர்ஜி நடத்தியகலாசாலையில் சேரச் சென்று முடியாமல் போகவே சென்னை திரும்பி 1910ல் புதுச்சேரி சென்றபோது பாரதியுடன் தொடர்பு ஏற்பட்டது. இரண்டரை ஆண்டுகள் புதுச்சேரி வாசத்துக்குப் பிறகு சென்னை வந்து பிறகு 1920 பூனாவில் மிலிடரி அகௌண்ட்ஸ் இலாகாவில் ஒன்றிரு மாதம் வேலை பார்த்து தமிழகம் திரும்பி டாக்டர் வரதராஜலு நாயுடு நடத்திய தமிழ் நாடுவில் சேர்ந்தார்.

பிறகு 'பிரபஞ்சமித்திரன்'ல். 1915ல் சுந்தரி (நாவல்) எழுதினார். பிறகு சுதந்திரன் (1920) சமரசபோதினி (1924) நடத்தினார். தமிழ் சுவராஜ்யாவில் (1925) வேலை பார்த்தார். பிறகு ராய சொக்கலிங்கம் நடத்திய 'ஊழியன்' பொறுப்பு ஏற்றார். 1930ல் உப்பு சத்யாக்ரகம் செய்து சிறைவாசம். 1931ல் சென்னை வந்து 1933ல் மணிக்கொடி ஆரம்பித்து நடத்தினார். பிறகு இலங்கை சென்று வீரகேசரி ஆசிரியராக இருந்த சமயம் ஸ்ரீமதி புவனேஸ்வரியை திருமணம் செய்து கொண்டார். 1936ல் சென்னை திரும்பியதும் சென்னை அகில இந்திய ரேடியோவுடன் தொடர்பு கொண்டார். ரேடியோவுக்கு ஏராளமாக எழுதினார். 1937ல் தமிழ்நாடு (தினசரி) சில மாதங்கள் 1939ல் பாரததேவி வாரப்பதிப்பு சில மாதங்கள் ஆசிரியர் பொறுப்பு வகித்து அவை நின்றதும் சுயேச்சை எழுத்தாளராக வாழ்ந்து வந்தார். 23–8–51ல் சென்னையில் காலமானார்.